உ

சிவமயம்.

கோம்பை ஜமீன் மரபினர் ஸ்ரீமாந்
கன்னப்ப கவுடர் அவர்கள் குமாரரும்
சிவபிரான்யமக வந்தாதி, மாலை மாற்று சித்திர
கவிகள், அரிச்சந்திர வெண்பா, சர்வகானகுடாரி
முதலான நூல்களின் ஆசிரியரும் சித்திரகவி
வித்துவானுமான ஸ்ரீமாந்

க. திருமலைஜக்கையகவுடர் அவர்கள்

இயற்றியருளிய

பக்திரச பஜனாமிர்தம்.

இது
கோம்பை ஜக்கதேவி கருணைவிலாச வித்தியாசாலை
ஆசிரியர் மானேஜரும், தமிழ் நாடு சுரபி ஒக்கலிகர
மகாஜன சங்கக் காரியதரிசியும், மதுரைத் தமிழ்ச்
சங்க அங்கத்தினருமான வரகவி

R. திருமலை ஜக்கையா கவுடரவர்கள்

முயற்சியாலும்
பல புண்ணிய புமான்களின் பொருளுதவியாலும்
மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

ருத்ரோத்காரி ௵
1924

இரண்டாம் பதிப்பு.] — [காப்பிரைட் ரிஜிஸ்டர்டு.

உ

சிவமயம்



LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

[illegible]

R· திருமலைஜக்கையா கவுடர்·

முன்னுரை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

அகர முதலாகிய எழுத்துக்கள் சமஸ்தமும் உலகத்தினிடை இறைவனை முதலாவதாகக் கொண்டிருப்பதுபோல நூல்கள் சமஸ்தமும் முன்னுரையை முதலாவதாகக்கொண்டிருக்க வேண்டியது மிகமிக அவஸ்யமே. "பாயிரமல்லது பனுவலன்றே" என்றார் பவணந்தியும்.

ஆக்கல் அளித்தல் அழித்தற்குடையவனாகிய இறைவனுக்கு இன்பத்தைத் தருவது இனிய கீதங்களென்பதை எவரும் ஆசேஷபிக்கமாட்டார்கள். இத்தகைய கீதங்கள் இறைவன் பேரிலும் அவரது அம்சத்தைப்பெற்ற அரசர்கள் பேரிலும் அளவிடற்கரிதாக இயற்றி வெளிவந்து உலவுவதை யாவரும் அறிந்திருக்கக் கூடும்.

இவ்வுலக வாழ்விற்கு இன்பத்தையும் அவ்வுலக வாழ்விற்குச் சுகத்தையும் அளிப்பது பாமாலைகளேயாகுமென்பதை உணர்ந்த காலஞ்சென்ற சித்திரகவி வித்வான் கோம்பை க. திருமலை ஐக்கய கவுடரவர்கள், பஞ்சகிருத்யங்களுக்கும் கர்த்தாவாகிய சிவபிரான் பேரில் யமகவந்தாதிநூல் ஒன்றும்,சிவபஜனைக்கீர்த்தனை நூலொன்றும் கற்றாரும் மிக்காருங்கண்டு அகமகிழத்தக்க விதத்தில் இயற்றி அச்சேற்றிப் பிரசுரப்படுத்தியிருந்தார்கள். அவற்றில் சிவபிரான் யமகவந்தாதி நூல்கள் பக்தர்களின் கரங்களிலிருந்து வருகின்றன. சிவபஜனைக்கீர்த்தனை நூல்கள் பல நாளாகத் தேடியும் அகப்படுவது அரிதாக இருந்துவருவதை உத்தேசித்தும் மேற்கூறிய வித்வான் அவர்களால் இயற்றப்பெற்று அச்சேறாதிருந்துவிட்ட சில கீர்த்தனைகளை ஒன்றுசேர்த்துப் பிரசுரிக்க வேண்டுமென்ற அவா பலருக்கிருந்ததைக் கண்டும் எனது ஆப்தநண்பரும் ஐக்கதேவி கருணாவிலாச வித்யாசாலை ஸ்தாபகரும் ஆசிரியர் மானேஜருமான வாகவி

R. திருமலை ஜக்கையாகவுடர் அவர்கள் மிக்க சிரமமெடுத்து அச்சேறு திருந்த கீர்த்தனைகளைச் சேகரித்து சிவபஜனைக் கீர்த்தனைகள் என்றிருந்த நூற்பெயரை "பக்திரச பஜனாமிர்தம்" என்ற புதுப் பெயர் புனைந்து, பிரசுரிக்க முன்வந்தமை போற்றத்தக்கதே.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில."

என்று கூறிய திருவள்ளுவ நாயனாரின் உண்மைக் கருத்திற்கிணங்கி உலகினர் சுகமெய்துவதற்குப் பக்திரச பஜனாமிர்தக் கீர்த்தனைகள் பேருதவியாகும் என்பது எனது முழுநம்பிக்கை.

ஈண்டு விவரிக்கப்பெற்ற இக்கீர்த்தனைகள் இளையாரும் முதியாரும் எளிதாகப் பாடத்தக்க விதங்களில் இயற்றப்பெற்றிருக்கின்றனவென்பதற்கும் இலக்கண இலக்கிய வழுவின்றிப் பாடப் பெற்றிருக்கின்றன வென்பதற்கும் மகாவித்வான்களாற் கொடுக்கப் பெற்றிருக்கும் சாற்றுக்கவிகளே சான்றாகும்.

உலகத்திடையிருக்கும் மக்கள் சமஸ்தரும் எப்பொருட்கும் ஒப்பற்ற இறைவனைப் பாமாலைகளாற் பூஜித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தைத் தனதாக்கிக்கொள்ள இக்கீர்த்தனைகள் மிகவும் பிரயோஜனகாமாகுமென்று நம்புகிறேன்.

இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்ற மற்றைய நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்துமாறு நண்பர் திருமலைஜக்கையா அவர்கட்கு நிறைந்த கல்வியும் தேர்ந்தமதியும் நோயற்ற வாழ்வும் எய்துவண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

கோம்பை 15—2—24
உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர்
காந்திப்பாறை எஸ்டேட் சொந்தக்காரர்

சிறப்புப் பாயிரம்.

இந்நிலவுலகின்கண் கவிதை, சங்கீதம், சித்திரம் ஆகிய இவை களே எல்லாருடைய மனத்தையும் நன்கு கவர்ந்து பேரானந்தம் ஊட்டுவனவாய் விளங்கிவருகின்றன. இவற்றுள் கவிதையே சிரேஷ்ட மானது. கவிதாசக்தியே ஊக்கத்தையும் உற்சாகத்தையும் எழுப்பி லோகாநுஷ்டானங்களுக்குக் காரணபூதமாய் உலகினர்க்கு மிகமிகப் பிரயோஜனகரமாய் இருந்து வருகின்றது.

புவனத்திலுள்ள பற்பல பிரதேசபாஷா மகாவித்வசிரோமணி கள் அவதார மூர்த்திகளாய்த் தோன்றி லோகோபகாரமான கவிதா (காவ்ய) நூல்களை இயற்றிப் பேருதவிபுரிந்து வந்திருக்கின்றார்கள், வருகின்றார்கள், மண்ணும் விண்ணும் உள்ளளவும் மன்னிய நற்கீர் த்திமாலை புனைந்து நீடு வாழ்கின்றார்கள்.

தெய்வ சிருஷ்டியின் மகிமையை யாவரே விவரிக்க வல்லார்? ஒவ்வொரு மனிதனுடைய முகமும் குரலும் வெவ்வேறு விதமாகப் படைத்தருளியிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமென்றால் ஏனைய வைகளை விரித்துரைக்க இயலுமோ.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்" என்றார் நாயனார்.

சர்வலோக சரண்யனாகிய ஜெகதீசனைப் புகழ்ந்தேத்தித் துதித் தலே நம்மைக் கரையேற்றி உய்விக்கச் செய்யும் சிறந்தமார்க்க மாகும்,

முற்காலத்தில் சமஸ்கிருத மகாகவி காளிதாசன், பவபூதி, மகாராஷ்டிர துக்காராம், தெலுங்குவேமன்னகவி, மலையாளம் துள்ளல் குஞ்சன் நம்பியார், நமது தமிழ்க்கவிஞர் கோமணிகளான கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஒளவையார் முதலான வித்வான்களும், தற்காலத்தில் ஜெகப்பிரசித்திபெற்ற ரவீந்திரநாததாகூர் (வங்காள மகாகவி) சாதுர்யம்சம் பொருந்திவிளங்கிய காலஞ்சென்ற சி. சுப்பிர

மணிய பாரதியார் முதலான கவிதாரத்னங்களும் தங்களின் அருமையான அநுபவ உணர்ச்சிகளையும் கற்பனைநயங்களையும் கவிகளின் மூலமாக வெளியிட்டுப் பிரசித்தி அடைந்திருக்கின்றார்கள்.

பாரதகண்டம் எனும் நம் தாய் நாடாகிய இந்திய நன்னாட்டில் பற்பல பாஷைகள் பேசப்பட்டு வருகின்றன. இந்திய சகோதரர்கள் ஆங்காங்கு அவரவர்களது தாய்ப்பாஷை விருத்தியை நாடி பாஷாபிவிருத்தி செய்து முன்னேற்றம் அடைந்துவருகின்றார்கள்.

ஆனால் நமது தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் தாய்ப்பாஷையைப் பலதுறைகளிலும் அலட்சியம் செய்துவருகின்றார்கள். அமிழ்தினும் இனிய தமிழ்மொழியின் சிறப்பு எத்தகையது?

"சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத்
தொழுது படித்திடடி பாப்பா" என்றார் பாரதி.

தமிழ்த்தாயின் அருமைப்புதல்வர்களே! புதல்விகளே!! தமிழே * தமிழ் என்று கொள்ளுங்கள். தமிழபிவிருத்தியையே பெரிதும் நாடுங்கள்.

சாக்ஷாத் எம்பெருமானைப் பண்ணோடு இசைத்துப் பஜனை செய்து துதித்தேத்துவது பக்தர்களது வழக்கமாயும் அநுகூலசாதகமாயும் இருக்கின்றது. சங்கீதத்திற்கு உருகாத ஓர் பிராணி உலகில் உளதோ! பகவானும் பண்ணைவிரும்பும் பரமதயாநிதி அன்றோ! பஜனம் பஜிப்பது பூஜிப்பது என்ற அர்த்தம் உடையதாகும். பஜனைக்கோர் ஒப்பற்ற வழிகாட்டியான பக்திரச பஜனாமிர்தம் என்ற இந்நூல் முன்பு 1903ஆண்டில் கோம்பை ஜனாப் உ. ம. சே. முகியுத்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்களது முயற்சியால் முதற்பதிப்பாக வெளிவந்து உலவினது. நிற்க. இந்நூலாசிரியரின் ஜீவியசாராம்சம் இங்கு சிறிது கூறுகின்றேன்.

கன்னடப்பிரதேசமான மைசூர் ராஜ்யத்தில் சுமார் 300வருடங்கட்குமுன்னர் வந்து இத்தமிழ்நாட்டிற் குடியேறின ஜாதியார் எங்கள் காமுகுல ஒக்கலிகவகுப்பினர்கள். எமது சுயபாஷை கன்ன

---

* தமிழ்—இன்பம்.

டம். தமிழ் நாட்டில் குடியேறினவர்கள் ஆனதால் தற்போது கன்னடம் வீட்டுப்பாஷையாக இருக்கின்றது. மைசூர்ப்பிரஜைகளில் காவில் ஒருபங்கு 14 லட்சம் ஜனசங்கியை உள்ளோர் ஒக்கலிகர்களே ஆவர். தமிழ்நாட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம் முதலான ஜில்லாக்களில் லட்சக்கணக்கான ஜனத்தொகையுள்ள ஒக்கலிகர்களும் வாழ்ந்து வருகின்றார்கள்.

எமது சமூகம் கல்வியில் பின்னேக்குடையது. ஆனால் தற்போது கல்வி விஷயத்தில் சிறிது முன்னேறி வருகின்றது. ஒக்கலிகர்களுக்குள் காவிய வசனநூலாசிரியராய் பேர்பெற்று ஒப்பற்ற சூடாமணியாய்த்துலங்கியவர் நமது கோம்பை சித்திரகவி வித்வான் க. திருமலைஜக்கையகவுடர் அவர்களே என்பது உலகறிந்த விஷயம்.

மதுரை ஜில்லாவில் பேர் பெற்று விளங்கும் கோம்பையம்பதியில் கோம்பை ஜமீன்மாவில் ஸ்ரீமாந் கன்னப்பகவுடர் அவர்கட்கு ஏகபுத்திர சிகாமணியாய் உற்பவித்தார். சிறுவயதில் கற்றகல்வியோடு சுயமுயற்சியாலும் கவிபாடுதலில் வல்லவராய் விளங்கினர். இவ்வுலகவாழ்வைத் துறக்கும் போது இவரது வயது எழுபதாகும். காலஞ்சென்றதினம் (1-11-17) பிங்களஹு ஐப்பசிமீ 16உ. இவர் காலஞ்செல்லுவதற்கு முன்பு சுமார் 3 வருஷகாலமாக இவரிடம் நெருங்கிப்பழகியிருக்கின்றேன். தொண்டுகிழவரானாலும் சதா புஸ்தகஆராய்ச்சியில் பெரிதும் விருப்புடையார். நல்ல மதியூகி. சோம்பல் என்ற குணமே அவரிடம் காணக்கிடையாது. மிகுந்த சுறுசுறுப்பும் முயற்சியும் உள்ளவர். 'தெய்வங்காட்டும், ஊட்டுமோ' என்ற பழமொழிப்படி முயற்சியினுலே இவர் முன்னுக்கு வந்தார் என்பது எனது திடமான அநுபவம்.

இவரிடம் (வியாசங்கம்) பழகிய அநேகர் தற்போது தேர்ந்த மதியும் உலகாநுபவமும் நிறைந்து விளங்குகின்றார்கள். கோமபை நகரின் தற்போதைய முற்போக்குக்கு மூலகாரணர் இவர்களேஆவர். இவரியற்றிய செய்யுள் நூல்களாவன:—காமாக்ஷி அம்மை பதிகம், மாவூற்று வேலப்பர் பதிகம், சிதம்பர சபாநாதர் பதிகம், மல்லிங்கநாதர் சிலேடைப்பதிகம், சித்தி விநாயகர் பதிகம், சிவ பஜனைக் கீர்த்

தனைகள், என்ற பக்திரசபஜனாமிர்தம், சிவபிரான்யமகவந்தாதி, மாலை மாற்று சித்திரகவிகள் முதலான நூல்கள். அவரது காலத்தில் அச்சிடப் பெற்றிருக்கின்றன.

அரிச்சந்திர வெண்பா, ஒருதுறைக்கோவை முதலிய காவிய நூல்களும், அற்புதகற்பனாரசம் நிறைந்த கர்வகாரன குடாரி என்ற நாவலும் இன்னும் அச்சாகாமலே இருந்து வருகின்றன. சுமார் 30வருஷ காலந்தொட்டே அநேக தமிழ்ப்பத்திரிகைகளுக்கு அரிய விஷயதானம் செய்து வந்திருக்கின்றார்.

கிரந்தம், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலான பாஷைகளிலும் நல்ல விற்பத்தியுண்டு, 'பாடையேறினும் ஏடதுகைவிடேல்' என்ற பழமொழி இவர் விஷயத்தில் ஏற்ற பொருத்தமானதாகும். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அன்றோ?

பஜனாமிர்தம் பழைய வர்ணமெட்டுகளாய்த் தோன்றின போதிலும் அருமையும் உருக்கமுமான வாசகங்களால் புனையப்பெற்றிருப்பது புகழத்தக்கதாகும். சங்கீதவழியில் தியாகராஜ ஐயரவர்களது கீர்த்தனைகளைத் தற்போது எவ்வளவு அருமையாய்ப்போற்றிவருகின்றார்களோ அவ்வாறே பக்திரசம் ததும்பும் கனிகரமான மெட்டுகள் வாய்ந்த பஜனாமிர்தமும் இத்தகைய நூல்வழிகொண்டதாகு மென்பது மிகையாகாது.

இந்நூல்தான், பார்ஸி முதலான ஆடம்பர வர்ணமெட்டுகளால் சங்கீத உலகத்திற்கே சோர்வுண்டாகி பழிக்கக்கூடிய பாடல்களை வேடிக்கை தமாஷ் பாணிகளில் பாட்டுக்களை அமைத்து அவைகளைப் படித்து சங்கீதத்திற்குக் கேடுசூழ்ந்தவர்களாய் விட்டார்கள் இக்காலத்தில். ஆடம்பரப்பகட்டு மெட்டுக்கள் பஜனைக்கு அவ்வளவுஉசிதமானவாகாவல்லவா? பஜனைக்கோஷ்டியார்களுக்கும் சங்கீத அபிருசி கொண்டவர்களுக்கும் இந்நூல் மிகுந்த பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை.

இதைப் புதிய பதிப்பாக வெளியாக்கவேண்டும் என்றஎண்ணம். எனக்கு நெடுநாளாக உண்டு. எனது கோரிக்கையைச் சமீபகாலத்தில் கோம்பை ஜமீந்தார் அவர்கள் குமாரர் மாட்சிமையாய்ந்த விஜயகல்

ஸ்ரீரங்க குமார தளவாய் அப்பாஜி துரைச்சாமி துரை அவர்களிடமும் இந்நூலாசிரியாது ஆதிசிஷ்யர்களும் இவ்வூர்ப்பிரபலஸ்தர்களுமான தீ. ர. திருமலை சுப்பு செட்டியார் அவர்களிடமும் ஜனாப் உ. ம. சே. முகீயித்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்களிடமும் தெரிவித்ததில், அவர்கள் எனது முயற்சிக்கு ஆதரவு காட்டினார்கள். ஊக்கப்படுத்தினார்கள். இவர்கள் மூவர்களுக்கும் என் அன்பார்ந்த வந்தனம் கூறுகின்றேன். அத்துடன் இந்நூல் அச்சாகி வெளிவரப் பொருளுதவி புரிந்த கனவான்கள் அனைவர்களுக்கும் எனது பணிவான வந்தனம் செலுத்துகின்றேன். இந்நூலை வெளியாக்குவதற்கு என்னுடன் சிரமம் எடுத்துக்கொண்ட நண்பரும் உபாத்தியாயருமான இவ்வூர் S. காமாக்ஷி பிள்ளை அவர்களுக்கும் எனது மனமார்ந்தவந்தனம் புரிகின்றேன்.

சர்வ வல்லமையுள்ள இறைவன் நம்மெல்லோரையும் ஆசீர்வதிப்பாராக.

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

ஜக்கதேவிகருணா விலாச வித்யாசாலை, கோம்பை.
15—2—24.

அன்புள்ள,
R. திருமலை ஜக்கையா.

மதுரை மணிநகரம் ஹைக்கோர்ட்டுவக்கீல்,

ஸ்ரீயுத ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A. B. L.

அபிப்பிராயம்.

இந்நூலாசிரியரின் உறவினரும் தமிழ்நலம் விரும்புபவருமான என் சிநேகிதர் கோம்பை R. திருமலைஜக்கையா அவர்கள் இந்நூலைப்பற்றி ஒரு அபிப்பிராயம் தரும்படி என்னைக் கேட்பதை மறுக்கொணாமையா லெழுதலானேன்; மற்றப்படி இந்நூல்போன்ற கீர்த்தன இசைத்தமிழியல்பறிந்து கூறுந்தகுதி யுடையேனல்லன். என் நண்பர் கீர்த்தனங்களை எனக்குப் பாடிக்காட்டக் கேட்டுவகை யுற்றேன். கீர்த்தனங்கள் பெரும்பாலு மிசையொடுபாட மிகவினிய சுவைநிறைந்துள்ளன. பக்திச்சுவையே பொருளாகக்கொண்ட இப் பாவினங்கள் தெய்வபக்தி நலமுடையனவெனக் கூறுவது மிகையாகும். இசைநயமும் பக்திச்சுவையுமே கண்ணாகக்கொண்ட இந் நூலில் யாப்பிய லிலக்கணமரபு வழுவாது, தமிழ்நறு மணமும் இனிய எளிய நடைநலமுந் தாமே யமைந்திருப்பது ஆசிரியர், கன்னடராயிருந்தும் அவரின் அளவற்ற தமிழார்வத்தையும் புலமை யையுமினிது விளக்குவதாகும். இந்நூலை வெளிப்படுத்தி தமிழருக் கின்பமும் தம் முன்னோரான ஆசிரியருக்குற்ற புகழுந்தரும் என் நண்பர் நன்முயற்சி மிகவும் பாராட்டத் தக்கதன்றோ!

மணிநகரம்
மதுரை.
18—3—24

ச. சோமசுந்தர பாரதி

ஜக்கதேவி சகாயம்.

1924-ம் வருஷத்தில் இந்நூல் இரண்டாம் பதிப்பாய்
அச்சிடுங்காலத்தில் கல்விமான்கள்
கொடுத்தருளிய

சாற்றுக்கவிகள்

—†—

அநுமந்த நகரம் மதுரகவி பிர்ம்மஸ்ரீ
ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் இயற்றியவை.

———

சீர்த்தநிறை யிசைதாளம் வருணமுறை யோதையின்பந்
தெளிவு தேனை
வார்த்தமெனு மதுரமொழி வருணமதி தெய்வமுதன்
மரபி னாய்ந்து
தீர்த்தர்தம செவிக்கேற்பத் திருமலைஜக் கையனெனுஞ்
செல்வன் சொற்ற
கீர்த்தனைக ளச்சியற்றிக் கீர்த்திநிலை யிட்டுமதி
கிளர்ந்தான் மன்றே. (1)

அத்தகையோன் கோம்பையெனும் அழகுதிரு நகருறையும்
அமுத வாக்கான்
சத்வசுகோ தயன்ராம சாமியருந் தவத்துதித்த
தயாள மிக்கோன்
புத்தமுறப் பொதுநலத்திற் புண்ணியஞ்செய் கண்ணியவான்
புரையொன் றில்லான்
சித்தமெழும் வாகவிநந் திருமலைஜக் கையாவென்
சிறப்புற் றோனே. (2)

———

பழநில்தலம் ஸ்ரீலஸ்ரீ மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள்
பிரபந்தத்திரட்டின் பதிப்பாசிரியரும் மார்க்கயன்கோட்டை
பிர்ம்மஸ்ரீ பிச்சாண்டி ஆச்சார்ய சுவாமிகளின் குமாரருமான

மகாவித்வான்

M. P. பழநிச்சாமி ஆச்சாரியர் அவர்கள்

இயற்றியது.

பதியுரிமை வாய்ந்தகுலப் பண்புரிமை நண்புரிமை பகர்பே ரின்ப
மதியுரிமைமாண்புரிமையெனைத்தனைத்துமொன்றாகமருவிப்பேணுங்
கதியுரிமைபூண்டசெழுங்கதிருமலைஜக்கையமால்கனிந்துபோற்றுந்
துதியுரிமை யுனதன்றோ திருமலைஜக் கையநந் துரைச்சிங் கேறே.

ஷை மகாவித்வான் ஸ்ரீலஸ்ரீ M. P. பழநிச்சாமி ஆச்சார்யர்
அவர்கள் மாணுக்கரும் மருகருமான வித்வான்

ஸ்ரீமான் M. S. சுந்தரம் ஆச்சாரியாரவர்கள்

இயற்றிய சிறப்புக்கவிகள்.

தண்டேன் மொண்டு நனியுண்டுற் சாகங் கொண்டு தொனிவிண்டு
வண்டே மண்டு வண்டடைவை வளஞ்சேர் கோம்பை மாநகர்க்கண்
விண்டே பண்டு கண்டுதுதி விளம்பும் ஜக்க தேவிக்குத்
தொண்டே கொண்டு வாழ்கின்ற சுராபி மாபின் பிரபுவழி. (1)

வருமந் தாநேர் புயனுன மகிபன் கன்னப் பனதில்லத்
தருமந் தழைப்பக் குலந்தழைப்பத் தமிழுந் தழைப்ப வன்றேனுக்
கருமந் தமக வாய்மேவி யாயுங் கலைகள் கற்றருளே
தருமந் தவா சிவன்றனது தாளே வணங்கும் மெய்யன்பன். (2)

கற்றா லடங்கி யதன்படிசெய் கையிலும் புரிந்து வாலறிவன்
நற்றா டொழுது மகிழ்வுறலே நல்லோ ரியல்பென் பதற்கிலக்காய்
மற்றார்க் குளுமில் பெரும்புலமை வாய்க்க வடங்கி வாயுரையில்
சற்றா கிலுங்காட் டாதீசன் தனக்கே யதனைச் சமர்ப்பிப்போன். (3)

கிளம்பு மனந்த விதமாமிங் கிதஞ்சேர் சித்ர கவியுள்ளும்
உளம்பு ளுக்கு மிறைக்கவிக ளுளவந் தாதி யுளுமன்றி
இளம்பு லவர்செய் பதிகமெனு மெளிய நூல்க ளுளுமதனில்
விளம்புங் கவிக டொறுமொருவி சேடம் வைக்கும் விற்பன்னன். ()

பொருத்த முறுமே லாங்கவித்வப் புலமை மட்டும் இயற்கையலால்
ஒருத்த ருணர்த்தல் மிகையெனலுக் கொருசான் றாகித் தனதறிவால்
பெருத்த கலைக ளிலக்கணங்கள் பேசும் இலக்கி யங்களெலாம்
திருதத முறக்கற் றாச்சரியத் தெருள்பெற் றிருந்த திறலாளன். (5)

எவனத் திறத்தில் யமகந்திரி பிதைப்போ வியற்றி னானென்னப்
புவனத் தினர்கள் சொலத்தெய்வப் புலமை யோடு மிருந்ததலால்
எவனத் திருந்த வாற்றலினு மெய்து முதுமை யினிலதிக
கவனத் தறிவு மிகமுதிர்ந்து கவிகள் பொழிந்த கருத்தாளன். (6)

இரும்பார் வியக்கு மினதிறத்தோ டிலங்கிச்சில்லாண் டுகளின்முன்
திரும்பாப் பதவி தனையடைந்த திருமலைஜக் கயன்செய்த
பெரும்பா வினங்கள் கீர்த்தனங்கள் பின்னு முளதை யச்சியற்றித்
தரும்பாக் கியவா னாகவவ தரித்தா னொருவ னவனெவனேல். (7)

இருமாநிலமாம்பூமடந்தைக்கெழின்மாமுகமாங்கோம்பையெனும்
திருமா நிலவு சமஸ்தான ஜெமீன்கஸ் தூரிக் குளப்பாஜிப்
பெருமான் திருமலைஜக்கய பிரபி னம்ஸ வம்ஸத்தில்
வருமெம் M. ராமசாமிப்பேர் வள்ள லளித்த சுகுமாரன். (8)

துங்கத் தமிழ்வா ணன்திருவுந் துதிக்கும் ஜக்க தேவியின்பேர்
தங்கத் தருவித் யாசாலைத் தலைவன் கோம்பைக் கிருஷிகர்கள்
சங்கத் தின்கௌ ரவகார்ய தரிசி மதுரைத் தமிழ்ச்சங்க
அங்கத் தினனற் சிவபஜனை அரிப ஜனைக்கோஷ் டிக[illegible]பன். (9)

இனந்த மானன் நலந்தேச மெய்த யாமிங் கெடுத்துரையா
அனந்த மான பொறுநன்மைக் காழுத் யோகங் களைப்பெற்றுச்
சனந்த மாசைக் குரியனிவன் தானென் றடைய வவரோடு
தினந்த மாஷாய்ச் சத்கால க்ஷேபஞ் செய்யுஞ் சீராளன். (10)

நல்வித் வான்கள் சகவாசன் நம்மேல் மிக்க விசுவாசன்
செல்வக் கோம்பை நகர்வாசன் செகமெங் கணும்நற் புகழ்வாசன்
சொல்வித் தகன்திண் புயபாரன் தூய குணங்க ளிலபாரன்
கல்வித் துறைதேர் திருமலைஜக் கையாப்பேர்க்கண் ணியவானே. ()

ஆன்ற தான புலமையினி லருங்கு ணங்கு றியின்மேலும்
சான்ற தாமா மிற்பெயரிற் சாக்ஷாத் தவனும் வருமிவன்பொன்
போன்ற தாமென் றவன்கவியைப் போற்றி யச்சிட் டளித்தனனால்
ஈன்ற தாயேன் மகவருமை யினைநன் கறியாள்? வாழியரோ. (12)

உத்தமபாளையம் துரிதகவி ஐனுப்

U. P. அப்பாவுஉபாத்தியாயர் அவர்கள் இயற்றியன.

பொன்னப்புள் ளாய பொழுதாலப் பாசனகன்
வன்னப்பூந் தாளின் வழிசாக்—கன்னப்பன்
சீர்த்தனயன் கோம்பைத் திருமலைஜக் கையன்றன்
கீர்த்தனந்தா னிக்காலக் கிதை. (1)

சாற்றுக்கவிகள்.

அம்மைஜக்க தேவியரின் கடாக்ஷமும் நம்பிகையி
னருளி னாலும்
செம்மையல தொருகாலுஞ் செய்தறியா நல்லாரின்
சேர்க்கை யாலும்
தம்மையடுத் தவர்க்கினிய நன்மொழியே சாற்றுமொரு
தன்மை யாலும்
இம்மையினற் புகழ்பரப்புஞ் செந்தமிழில் வாகவியாய்
இயற்றும் நாவான். (2)

ஆர்R.திருமலைஜக்கை யாவென்பான் அச்சியற்றி
அதனா லாய
பேர்புனைந்தான் புகழ்சிறந்தான் மகிதலத்தார் பாடியவப்
பெருமை யோர்ந்து
வார்சடிலச் சங்கரனுந் தினகர வாக்கியத்தால்
மகிழ்வுற் றான்மிக்
கார்தகைமை யின்றமிழாற் பெரிதுறுமென் றிம்பர்தனிற்
காட்டிற் றம்மா. (3)

ஐக்கதேவி சகாயம்.

1903-ம் வருஷத்தில் இந்நூல் முதற்பதிப்பாய் அச்சிடுங்காலத்தில்
கல்விமான்கள் கொடுத்தருளிய

சாற்றுக்கவிகள்.

கொட்டகுடி ஜமீன் மானேஜரும் சைவசித்தாந்த
நிஷ்டாநுபூதி வாய்ந்தவருமாகிய
ஸ்ரீமான் கு. அண்ணாமலைப் பிள்ளையவர்கள்
இயற்றியது

பாவைபுடைசூழவனி மிசைநளினைவளருமொரு
பதியாதெனத்துருவியே
பார்த்தினியமறையோர்கள் வேள்விபுரிமனைகளும்
பான்மொழிநிலாமுகத்தர்

குரவைபயில்வீதிகளு மேலமொடுபணமணக்
குலவுமாடங்களுஞ்சேர்
கோம்பைநகரேயெனத் தேர்ந்தமாலவ்விடங்
குறுகுவேமாகிலந்த

வரனைதுபணைவல்கு லாயிழையைமருவலா
மதுநமக்குரியவூரே
யாகவெனவந்தினிது வாழுமங்கைதனி
லதிகநலனுறவாழுவோன்

காவிலாநெஞ்சினன் றிருமலைசக்கயக்
கவிவாணனானதன்பன்
கழறுசிவகீர்த்தனம துலகுய்யுநூலெனக்
கற்றோருரைப்பர்மாதோ.

எரசக்கராயகனூர் ஜமீன் மல்லிங்கபுரம் காலஞ்சென்ற
ஸ்ரீமான். பொன்னம்பலக் கவிராயரவர்க ளியற்றியது.

முத்தமிழிலெத்தமிழுந்தேர்ந்துசொலுந்தமிழ்ப்புலவிர்மொழியக்கே
உத்தமியமபிகைகணவன்றனையனுளமகிழ்ந்துகதியுதவவேண்டிச்[னீர்
சுத்தமிகுசிவபஜனைதிருமலைசக்கயக்கவிஞன்சொற்றனிந்தச்
சத்தமிருநிலத்தினையுந்திசைபினையுமளாந்துவிண்ணிற்றவிற்றம்மா.

சிவகிரி சமஸ்தானம் மஹா வித்வான்
ஸ்ரீமான் ச. திருமலைவேற் கவிராயரவர்கள்
இயற்றியது.

விரும்புருவம்பெறுமதனன்கோம்பைவளம்பதிவாசன்வேந்தர்போற்ற
வரும்புருடதில்கமெனுந்திருமலைசக்கயதமிழ்ப்பாவல்லோன்சொன்ன
கரும்புருசிநிகர்மதுரக்கீர்த்தனமாந்தமிழ்க்குமகாகடினமார்வல்
விரும்புருகுங்கல்லுருகுமெவர்மனந்தானிதற்குருகாதெண்ணுங்காலே

மார்க்கயன்கோட்டை வித்வான்
ஸ்ரீமான் M. P. பழநிச்சாமி யாசாரியாரவர்கள்
இயற்றியது.

அந்தணந்தானம்புகழோடரியகதியருள்வதெழிலானுர்பாத [ல்
வந்தனந்தரனெனத்தெளிந்துமகிழ்கீதத்துதித்தொகுதிவழுத்தினுறை
நந்தனந்தாமரைத்தடஞ்சூழ்நலர்திகழ்தென்கோம்பையெனுநகரில்வாழ்வு
கந்தனந்தாமணிகவிஞர்கண்மணியாந்திருமலைசக்கயவல்லோனே.

புதுப்பட்டி அஷ்டாவதானியவர்கள் குமாரர் காலஞ்சென்ற
ஸ்ரீமான் செல்லமுத்து சேர்வையவர்க ளியற்றியது.

வருமலையாலடியர்குழாம்வநந்தமலருள்புரியும்வரதன்வாசக்
தருமலைசேர்குழற்கவுரிதழுவுசிவன்மீதுகீர்த்தனங்கள்சந்தப்
பெருமலையக்கும்பமுனிக்கிணையெனப்பறபலகலையும்பெரிதுணர்ந்த
திருமலைசக்கயதமிழ்ப்பாவலன்பகர்ந்தான்புகழ்ந்திதனைச்செப்பார்யா
[சே

பழனிஸ்தலம் எஸ். எஸ். எஸ். வி. கம்பெனி ஸ்டேஜ் மானேஜர்
மகா-ள-ள-ஸ்ரீ வே. முத்தனாசாரியாரவர்கள்
இயற்றியது.

சகலபுவனாத்மரக்ஷகர்த்தனைசிவ
சம்புமீதன்புகூர்ந்து
தண்டமிழினன்மதுரசகீர்த்தனங்கள்பல
சாற்றிநற்கீர்த்திபெற்றான்
பகாரியவாகமபுராணேதிகாசவிற்
பனசிரேஷ்டப்ரதாபன்
பத்தியுடனேபஜனைநித்தியஞ்செய்தான்
பதமலர்துதிக்குநேமன்
திகழ்கிரணசந்திராதித்தர்முறைபிசகினுஞ்
செப்புமொழிதப்பாதவன்
செந்தமிழ்ப்பாவலர்மதித்திடப்பலகலை
தினம்பயிலுநன்னாவினான்
மகிமைபெறுகோம்பையம்பதியில்வாழ்கன்னப்ப
வள்ளல்மாதவகுமாரன்
மதியூகவெகம்பீரதிருமலைச்சக்கைய
மகாவித்வதிடாத்னமே.

கோம்பை ஸ்ரீமான் துரைப்பாண்டியாவர்கள் குமாரரும்
கோம்பை யூனியன் போர்டு பிரசிடெண்டுமான
ஸ்ரீமான் சின்னச்சாமி குள்ளப்பகவுடர்
அவர்கள் இயற்றியது.

அருமறையினுட்பொருளாம்சிவபிரானருட்கடல்சீரதனைமொண்டு[லே
திருமலைசக்கயனெனுங்கார்பொழிசிவகீர்த்தனமழையின்செழுமையக
வருமகிலத்தஞ்ஞானமெனுங்கோடைநீங்கியிமைமறுமையின்பம்
தருமரியசிவபத்தியெனும்பயிர்களுலகெங்குந்தழைக்குமன்றே.

அம்மாபட்டி ஸ்ரீமான் S. S. சுருளியாண்டிக் கவுடர்
அவர்க ளியற்றியது.

[நோல்

பார்த்தனங்கயிசைமோதப்பாசுபதம்பரிந்தளித்துப்பனைக்கைமாத்
போர்த்தனங்கனுகமதன்றனைத்தீய்த்தன்பருக்கருளேபுரிந்துகாக்கும்
தீர்த்தனங்கமணியான்மேற்றிருமலைசக்கயனன்பாற்செப்பிடுஞ்சங்
கீர்த்தனங்கட்குருகியன்றேவல்விரும்புக்கயமெனும்பேர்கிடைத்தமே

கோம்பை போர்டு பெண்பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்
ஸ்ரீமான் V. பரமசிவன் சேர்வை அவர்கள்
இயற்றியது.

கடிபொழில்சூழ்கோம்பைநகர்கன்னப்பன்றவத்துதித்தகல்விமிக்கோ
படிபுகழுந்திருமலைசக்கயகமகனுள்ளன்பாற்பத்தியுற்றே [ன்
யடிமுடியுகடுவுமிலாப்பான்மேற்சொல்கீர்த்தனமாமழுதையுண்டோர்
மிடிமைதுயர்பவமகற்றியெங்காளும்பேரின்பமேவுவாரே.

கோம்பை தனவர்த்தகரும் கோம்பை பஞ்சாயத்துக்
கோர்ட் பிரசிடெண்டுமான
ஸ்ரீமான் T. R. திருமலைசுப்பு செட்டியாரவர்கள்
இயற்றியது.

பார்த்திபர்போற்றுங்கோம்பைநகர்வாழ்கன்னப்பவிற்பன்னனீன்ற
சீர்த்திமிகுதிருமலைசக்கயக்கவிஞன்றனிமுதலாம்சிவத்தின்மீதும்
கார்த்திகேயன்மீதும்பகர்சங்கீதங்கள்பவக்கடல்கடத்தும்
பூர்த்தியாம்வங்கமதாம்அகவிருட்கோர்தீபமென்றும்புகலலாமே.

சென்னை மேரிராணி காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதரும் நல்லாசிரியன் பத்திராதிபருமான கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இயற்றியது.

பார்த்தனையன்றெதிரிட்டுவலிந்தாண்டுபாசுபதம்பரிவினீந்த
தீர்த்தனைநெஞ்சவப்புறக்குமினியநெறியிசையென்னத்தெளிவிஞேர்ந்து
கீர்த்தனைதந்தான்கோம்பைத்திருமலைசக்கயக்கவிஞன்கேடிலன்பு
வார்த்தனையபத்தியுடன்நவாசமும்வளம்பலவுமன்னமாதோ.

இந்நூலைப் பரிசோதித்தருளிய ஸ்ரீமான் ச. திருமலைவேற் கவிராயரவர்கள்மீது இந்நூலாசிரியரியற்றியது.

ஆர்த்தனமாதிரைகுலவமலிதடஞ்சூ
　　ழணிதிகழ்மல்லிங்கநகர்தனில்வாழ்நேமன்
வார்த்தனமாதிரமருப்பின்வயங்குவாணி
　　வண்சுரும்பரிசைபயில்செங்கமலமேவுஞ்
சீர்த்தனமாதிருவரைத்திண்புயநாவேற்ற
　　திருமலைவேற்கவிவலவன்சிவன்மீதியான்சொல்
கீர்த்தனமாதிகளைக்கண்பார்த்துநல்கிக்
　　கிரீசனருளொடுபடைத்தான்கீர்த்திமாதோ.

சாற்றுக்கவிகள்.

சம்பூரணம்.

கோபாத்தியாய
சாமிநாதையர்
நிலையம்,
சென்னை - 600090.

உ

ஜக்கதேவி சகாயம்.

சித்திரகவி வித்வான்

க. திருமலை ஜக்கையகவுடர் அவர்கள்

இயற்றிய

பக்திரச பஜனாமிர்தம்.

கணேசர் துதி.

1. இராகம் நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

ஆகுவாகனா கஜானனா (ஆகு)

அநுபல்லவி.

கோகனகசரணா ஆகமவிதரணா கோதறுசிவசுதனே. (ஆகு)

சரணங்கள்.

விமலைபாலனே சுசிலனே
கமலதடநயன விமலவடசயன
கவினமாரிமருகா (ஆகு)

இந்த்ரபூஜிதா சுபாஷிதா
சந்த்ரஜடாதரா மந்த்ரகடோதரா
தவளாம்பரதரனே (ஆகு)

பகர்நன்னீதனே அதீதனே
ககனமுடனுலகு புகழுமயிலிலகு
கடவுள்சகோதரனே (ஆகு)

சுருதியாதியே அநாதியே
மருவுசதுர்ப்புயனே திருமலைஜக்கயன்சொல்
வரதா கதிநீயே. (ஆகு)

2. இராகம் கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

ஞானகஜமுகா நாளும்உன்பாதம்
நம்பினேன்என்னை ரட்சித்தருள்வாய் (ஞா)

அநுபல்லவி.

நின்தயாளா தேவகுஞ்சரிபா
சின்மயரூபா தேஜோமயனே (ஞா)

அம்பிகைபாலா அமலகுணாகா
ஆதிகணேசா அங்குசபாசா (ஞா)

சர்வாதீதா சமாசநீதா
சாஸ்வதமோன தவளாம்பானே (ஞா)

சந்ததம்திருமலை ஜக்கயன்முடிமேல்
தாளிணைசூட்டுந் தனிமுதற்பொருளே. (ஞா)

சத்குரு வணக்கம்.

---

3. இராகம் கீர்வாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவகுருவந்தனமே செய் சிவகுருவந்தனமே ஆ (சிவ)

அநுபல்லவி.

சிவகுருவந்தன மே நலமனமே
தவமிதுவே தினமே ஆ (சிவ)

அருவினைநீக்கும் இருவினையாக்கும்
அருள்விழிநோக்கும்* ஸதா ஆ (சிவ)

நெறியிதல்லாது பெறுவகையாது
நீமறவாது ஸதா ஆ (சிவ)

திருமலைஜக்கயன் சென்னியின்மீது
சேவடிமலர் சூடும் ஆ (சிவ)

சரஸ்வதி துதி.

4. இராகம் கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

வாணியேயென்னாவில் வந்தருள்வாய் (வாணி)

அநுபல்லவி.

காணியதாய்மிகக் கருணைபுரிந்தேயென்றும் (வாணி)

சரணங்கள்.

மலரயன்செழுநாவில் வாழுமற்புததேவி
நிலவுமறிஞர்க்காவி நீயுகந்தெனைமேவி (வாணி)

அருமைமிகும்நீதாயே அடிமைநானுன்சேயே
பெருமையுதவிநீயே பேணியெனையாள்வாயே (வாணி)

தாட்டுணைதிருமலை ஜக்கயன்[illegible]லை தன்தலை
சூட்டுங்கலாநிலை சுதந்தரியேகலை (வாணி)

(ராமமகி ப்ரணதபால என்ற மெட்டு.)

5. இராகம் கலியாணி-தாளம் ரூபகம்.

பல்லவி.

தாரகமா ப்ரணவரூப தாரகமா சமய விருத சகள வடிவ (தாரக)

அநுபல்லவி.

சர்வபூத சர்வபூரண சர்வாதீத தளபதும
சரண யுகள பரம குரவ (தாரக)

நந்திதேவ நந்திவாகன நந்தீச கணசமுக
நாத கீத வேத போத (தாரக)

திரிநேத்ர திரிபுராந்தக திருமலைஜக்கய வந்தித
சிமய திலக விமய நிலைய (தாரக)

(காக்கவே வருவாயே கருடனேறி என்ற மெட்டு.)

6. இராகம் தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரமகதேவா அரோஹர
சங்கரமகதேவா.

அநுபல்லவி.

துங்கரவிநயன சுந்தரவிபுத
பங்கரஹிதசரதா அரோஹர (சங்கர)

பாலவிலோசன பதிததயாள
நீலகிரீவபதே அரோஹர (சங்கர)

அங்கஜமர்த்தன அனந்தகல்யாண
பங்கஜபதயுகளா அரோஹர (சங்கர)

சந்ததம்திருமலை ஜக்கயன்பணிநாதா
வந்தெனையாண்டருள்வாய் அரோஹர (சங்கர)

---

7. இராகம் பீல்-ஆதிதாளம்.

பல்லவி.

பரமநித்தியானந்தத் தாண்டவராயா
பாலவிலோசன மாம்பாஹீ

அநுபல்லவி.

சுரகணவிநுத சர்வாதீத
சோமஜடாதர மாம்பாஹீ
சோகநிவாரண கோமளாங்க
சோணகிரீசா மாம்பாஹீ (பரம)

சிதபாக அம்புஜசரண
தீனதயாளோ மாம்பாஹீ
சித்தஜநிக்ரக சுஜனபாலன
சின்மயகுரவே மாம்பாஹீ (பரம)

பர்வதராஜ புத்ரிமனோகர
பன்னகபூஷண மாம்பாஹி
பாஹிதிருமலை ஜக்கயவந்தித
பஞ்சாக்ஷரவேச மாம்பாஹி (பரம)

(செலி நேனெட்லசகிம்துனே என்ற ஜாவளி மெட்டு.)

8. இராகம்நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

உனை நானென்றும் நம்பினேனே ஜக
நாதா கருணாகரா உனை நான்

அநுபல்லவி.

மானார்மலர்க்கையனே எங்கும் தானாகியமெய்யனே—உயர்
வானோர்பணிதுய்யனே உனை (நான்)
சோணாசலவாசனே தில்லை வாணா உமைநேசனே—மறை
காணாமருநீசனே உனை (நான்)
உலகிற்பிரகாசிக்கும் பல கலைகற்றோரைநேசிக்கும்—திரு
மலைஜக்கயன்பூசிக்கும் உனை (நான்)

(தேன்துளிக்கும் வண்டுகிண்டும் என்றமெட்டு.)

9. இராகம் செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி.

ஈசனேயடியவ ரிதயமதில்நிதமிலகும்
வாசனேயென்னெதிர்வந்துசுகந்தருள்வாய்.

அநுபல்லவி.

பாசம்நீத்தமெய்த் தாசருக்கருள்
பாலித்திடுசிவனே திரிசூலப்படையவனே ஜக (ஈசனே)

சரணங்கள்.

மூர்த்திமூவரினுமுன்னவனேநன்னயமிகு
சீர்த்திசேர்சந்திர சேகரகிரு பாகரனே
பூர்த்தியாய்முகம் பார்த்திடாய்பணி
பூண்டவனே தாண்டவனே காண்டீபனை யாண்ட ஜக (ஈசனே)

நிந்தையாகியபல நெறியதனால் வெறிகொளுமென்
சிந்தையாகுலமது தீர்ந்திடமகிழ் கூர்ந்திடுவாய்
தந்தைதாய்குருவிந்தைசேர்தெய்வம்
சகலமுநீயல்லாதொரு புகலுளதோசொல்லாய் ஜக (நீசனே)

காலகாலஜகத் காரணபரிபூரணனே
பாலலோசனபொற் பாதாசபை நாதாதிகழ்
நீலகண்டக பாலருத்திர
நிலைபெற்றிடநாளும் திருமலைஜக்கய னோதும் ஜக (நீசனே)

(மாதரை நினையாதே என்றமெட்டு.)

10. இராகம் கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

நாதனைமறவாதே வேத நாதனை மறவாதே.

அநுபல்லவி.

ஆதனைமிசைபா மாதனைத் தினமே
அன்புடன்விரும்பியே யலைந்திடு மனமே (நாதனை)

சரணங்கள்.

காதகருறவாற் கயல்விழி வேசி
காந்தனைத் திரிந்து நீ கடியபொய் பேசி
பாதகனாகாமற் பழி வழி கூசி
பவங்களையறவோட்டிப் பதிதரும் காசி (நாதனை)

என்றும் சைவசமய மார்க்கத்தை நாடு
இசையுடனேசிவ பஜனையைப் பாடு
சென்று சிவனடியா ருடனுற வாடு
சிவசிவவெனுமந்திரம் செப்பியன் போடு (நாதனை)

அருமறைமுடிவினு மவனல தில்லை
அண்டர்கோனிவன்கீர்த்திக் குண்டோவோ ரெல்லை
திருமலைஜக்கயன்சொல்திகம்பரன் றொல்லைத்
தீவினையடங்கலும் தீர்த்தருள் தில்லை (நாதனை)

(சிவசிதம்பரத் தாண்டவராயா என்றமெட்டு.)

11. இராகம் சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

கனகசபையிலாடியதேவா கதி-யளித்திடும்தில்லைக்
கனகசபையிலாடியதேவா—ஒற்றைக்
காலைத்தூக்கிப்பரிபுரம் கலகலவென்றேலமிடக்
கனகசபையிலாடியதேவா உக்ர காளிநாண பாதர்கள்
காதல்பூணஅடியவர் கண்டுமிஞ்சியவுவகை
கொண்டுநெஞ்சகமுருக கனகசபையிலாடியதேவா.

அநுபல்லவி.

பனகபூஷணம்கையிற்றரித்து பலமலர்த்தொடையுரத்திற்பரித்து
பணிமதிச்சடை திகழவிரித்து பரவசமாக
தரிகுகுதரிகுகுஜெம்தரி தில்லாணுதொம்தரிகிட
தகணகதகணகஜெம் தகணகதகணகஜெம்
ததிம்திமித ததிம்திமித ததிங்கணதத்தோமெனவே (கன)

சரணங்கள்.

கொலைமுதலாம்பாவமைந்தும் குடிகொள்நெஞ்சவஞ்சகருடன்
கூடியேபிழையியற்றிமமதை கொண்டுமே மருளாய்
வலையிலேபுகுமானெனநான் மயங்கிடாமலித்ததியிலென்முன்
வந்தடியேன்கதிபெறும்படி மலரடி யருளாய்
அலைகடலுலகினிலுன்றனை யல்லாலேதுங்கதியிலை
அகமிகமகிழ்பெறவும் இகபரசுகமுறவும்
அனந்தமொடு ஜகம்புகழ அனமுந்தன மூந்தந்தருள் (கனக)

மறுவறுமாதவமோன மலரறிதமெஞ்ஞானபூரண
மகிமைபெறுநின்னடியாருடன் வாழவே கூடி
அறுபகையிலொன்ருகு மரிவையர்தம்மோகபாச
அந்தகாரந்தனிற்புகாமல்நின் னருளொளி காட்டி
குறுகியபிணிமிடியென்றன்மு னில்லாதோடவுமிருபுகழ்
குவலயமதிலிலக கவலைகளெதும் விலகக்
குறித்தவரமளித்தடிமை கொண்டெனையாள் வாயாஹர (கனக)

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

அருமறைதேர்நான்முகனு மம்புயலோசனமாலும்
அலைந்துதேடியுங்காணவொண்ணு அடி முடியோனே
மருவுசராசரமீன்ற மாதராவோர்பாகனே திரு
மலைஜக்கயன்றனி தயாசனம் வளர் நெடியோனே
பொருவருநெடுவடகுன்றெழில் வில்லாயோர் செங்கையிலுற
புரநனியெரிபடவும் சுரர்பயமதுவிடவும்
பரிந்துபணியிரந்தவனே புலியும்பணியும்பணிய (கனக)

---

12. இராகம் முகாரி-அடதாளம்.

பல்லவி.

வேண்டுவதெது நெஞ்சமே—யுனக்கு
வேண்டாதெது நெஞ்சமே

அநுபல்லவி.

ஆண்டுநமை ரக்ஷிக்கும் தில்லைநடராஜர்
அருட்பார்வையே வேண்டுமா அல்லால்
மாண்டுமடியுமட்டும் சஞ்சலம் தருமாதர்
மருட்பார்வையே வேண்டுமா நீ (வேண

நித்தமுமைபங்கர் பாதத்திலர்ச்சித்து
நிரப்பமலர்கள் வேண்டுமா அல்லால்
பத்தஞ்சற்றுமில்லாத வேசையர் படுக்கையில்
பரப்பமலர்கள் வேண்டுமா நீ (வேண்டுவ)

திருநாள்பூசை தவம் செய்யுமடியர்துன்பம்
சிதைக்கும்பாதமே வேண்டுமா கேட்ட
தொருநாள்கொடா விட்டாற் போடாவென்றேயெட்டி
உதைக்கும்பாதமே வேண்டுமா நீ (வேண்டுவ)

ஆதிபகவனடி தாழும் சற்ஜனர் வாழும்
அந்தவீடே வேண்டுமா அல்லால்
சூதினாற்காமுகர் குடிகெடுக்கும் வேசையர்
சொந்தவீடே வேண்டுமா நீ (வேண்டுவ)

அன்பன் திருமலைஜக் கயன் துதிசெய்திடும்
அச்சிற்றம்பலம் வேண்டுமா அல்லால்
இன்பம் போலவேகன துன்பம் செய்விலைமாதர்
எச்சிற்றம்பலம் வேண்டுமா நீ (வேண்டுவ)

(வையாபுரிமுருகையனே என்ற மெட்டு)

13. இராகம் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

நித்தியானந்த பூரணனே நின்மலபதாம்புயனே

அநுபல்லவி.

அத்தியுரிபோர்த்த சத்திமணாளாநின்
பத்தியே தந்தருள்வாய் (நித்தி)

சரணங்கள்.

வில்வவன நாதனே விண்ணோர் பணிபாதனே
வல்வினைகள் நீங்க செல்வம் வளர்ந்தோங்க
நல்வரமே யருள்வாய் (நித்தி)

கன்னல் மொழிசேருமை காதலனே யடிமை
இன்னலறநீக்கி நன்னயமாயாள்வாய்
பன்னகபூஷணனே (நித்தி)

கல்லை நிகரென்னெஞ்சம் கரையவருள்நீ தஞ்சம்
தில்லைநடேசாவென் தொல்லைவினைதீர
இல்லையே யென்ன செய்வேன் (நித்தி)

சேவடி சென்னிபுனை திருமலைஜக்கயனை
பூவுலகின்மீது காவல் செய்தாள் ஸர்வ
ஜீவதயாபரனே (நித்தி)

---

14. இராகம் தன்யாசி-ஆதிதாளம்.
பல்லவி.

சம்புசிவ சந்த்ரசேகரா உயர்
தற்பரனே நற்கயிலை வெற்பிலுறையற்புதனே
தாணுவேகிருபாசாகரா

அநுபல்லவி.

அம்புஜமலர்ப்பாதனே நம்புமெளியார்கள்தமை
அனவரத மருள்செய் கனவரதனேயெழில் (சம்பு)

சரணங்கள்.

இன்னமென்மே லென்ன வன்மமோ உனை
இரவும்பகலு மன்பாய்ப் பாவி மிகவுருகும்
ஏழையேன் செய்பூர்வ கன்மமோ
பன்னகாபரணா செழுங் கன்னல்மொழியுமைபாகா
பக்ஷமுடனே யெனை நீ ரக்ஷியிதுவேசமயம் (சம்பு)

கன்மபரிபாகா உனையே தினம்
கருத்தினி லிருத்தினேன் வருத்தம தகற்றியே
காத்தருள் புரிவா யெனையே
சின்மயபஞ்சாக்ஷரனே நின்மலபரிபூரணா
சித்தரொடு முத்தர்பணி நித்தனே மகத்வமிகு (சம்பு)

அருமறைபணி தூயனே நாளும்
அண்டர் பரவும் பரனே தொண்டர்தமை யன்பினொடும்
அடுத்துவந்தாளு மெய்யனே
சருவபூதகாரணா திருமலைஜக்கயனை
சந்ததங்காத்தருள் சோம சுந்தரதயாபரனே (சம்பு)

(இதுசமயமையா வைவேல் முருகையா என்ற மெட்டு)

15. இராகம் கீர்வாணி—ஆதிதாளம்

பல்லவி.

விமலதாரணனே வேதபூரணனே

அநுபல்லவி.

நிமலகருணாகர நிகிலகாரணனே (விமல)

சரணங்கள்.

திருவளாரு ணேச சிதசசி சேகர
அருணகோடி பிரகாச அரஹரபுர ஹர (விமல)

பனகபூஷணகர பரமபதாவ னக
கனகமய தர கஜமுக சுஜ னக (விமல)

அருமறை தினமுவந் தறையுமாதிபகவ
திருமலைஜக்கயவர் நிதறுவ பத சிவ (விமல)

(ராமநாமஞ்செய் ஜென்மசாபல்யம் என்ற மெட்டு.)

16. இராகம் காபி-அட தாளம்.

பல்லவி.

பங்கஜமாமலர்ப் பதந்தரவாவா சிதம்பரதேவா

அநுபல்லவி.

சங்கரகிரிதர எங்கும்ப்ர காசா
சாட்குண்யகருணைவிலாசா கனகச பேசா (பங்கஜ)

நிரந்தர மடியரைப் புரந்தருள் நீதா
நித்யானந்த ஜகநாதா சிவஞான போதா (பங்கஜ)

உணர்வில்லாதவர் சற்று முணரா அருவே
உணருமறிஞர்க்குநல் லுருவே பரமசற்குருவே (பங்கஜ)

திருமலைஜக்கயனை மருவியாள் மெய்யா
தெய்வம் நீயென்பதென்னபொய்யா வாரந்தருகையா (பங்கஜ)

(விடமுசாயாவே என்ற தியாகராஜகீர்த்தனை மெட்டு.)

17. இராகம் காகரப்பிரியா-ஆதி தாளம்.

பல்லவி.

மனமேயோடாதே ஜக மருளால்வாடாதே

அநுபல்லவி.

தினமேதாவில் மானுந் தழலும்
செங்கைகொளீசனை நினையா துழலும் (மன)

சரணங்கள்.

பொன்னிலமுடனே தாவுநற் சேலே
போல்கீள்விழியா ரரசையி னாலே

தன்னேரில்லா ஈசன் காலே
தஞ்சமென்றது திருமெயில் போலே (மன)

தொண்டர்தம்மீது நல்லருள் பழுத்துச்
சொரியும்தேவ தருவென வழுத்து
மண்டர்கோமான் திருவைந் தெழுத்து
மறியாதுன்னுட னென்னையு மிழுத்து (மன)

சீரரறிஞர் நேசம வாவும்
திருமலைஜக்கயன் சிந்தையில் மேவும்
காரார்கண்டன் செயலே யாவும்
கணமதிற்பதினு லுலகமும் தாவும் (மன)

(கொஞ்சவயதாச்சே எனைக்கூடலாகாதா என்ற மெட்டு.)

18. இராகம் வீரவசந்தா-ஆதிதாளம்.

பல்லவி.

சந்த்ரசேகர கங்காதர சம்போஹரனே

அநுபல்லவி.

பந்தமாமறைதேடும் பரனேமிகவாடும்
பாவியேனுனைநாடும்வகை பாரரய் வரதா (சந்த்ர)

சரணங்கள்.

சின்மயரூபனே திவ்யப்ரதாபனே
தில்லைவாழ்நாடராயா செங்கண்மால்பணிதூயா
தினந்தொண்டர்சகாயா துயர் தீர்த்தாளையனே (சந்த்ர)

தற்பராதிருமலை ஜக்கயன்போற்றும்
சச்சிதாநந்தபோதா தமியேன்மிசைவாதா
ஜகமாயையின்தீதால்மனந் தாழவில்லையே (சந்த்ர)

---

19. இராகம் காம்போதி-தாளம்ஆதி.

பல்லவி.

இந்த வேளை நீவந்தெனையாள் சர்வேசா

அநுபல்லவி.

கந்த வேளைத்தந்த காரணாயா ஞெந்த (இந்த)

சரணங்கள்.

வஞ்சமாயையாலே மருண்டே னுருக்காலே
அஞ்சலென்றென் மேலே அன்புறுந்தாய்போலே (இந்த)

சிற்பராகங்காளா செய்யமலர்த்தாளா
அற்புதயாளா அம்பிகைமணாளா (இந்த)

திருமலைஜக்கையன் தினந்தினமுமுய்யக்
கருணைசெய்யுந்துய்ய கத்தனேயருள்செய்ய (இந்த)

20. இராகம் சுருட்டி தாளம்-ரூபகம்.
பல்லவி.

ஜகதீசா உன் தாளிணையே தினம் நம்பினேன்.

அநுபல்லவி.

மிருதோத்திர பக்த சுஜன பாலனு பிரணவசுந்தா. (ஜக)

சரணங்கள்.

அருமறைகாணுத் தில்லை யம்பலவாணு
கருணாகரசுந்தரேச காரணபரிபூரணசம்போ. (ஜக)

கனகசபேசா திருக் கயிலைநிவாசா
ஜனகனுதியர் தெளியமோன சாதனமருள்சேதனசம்போ (ஜக)

அமரர்சகாயா வரு ளம்பிகைநேயா
சமரதிரிபுராந்தகசிவ தற்பராணந்தஅற்புதசம்போ (ஜக)

திருமகள்சேரும் வகை செய்தருள்கூரும்
தருணமீதெனையாள் திருமலை ஜக்கயன்பணிமுக்யனேசம்போ (ஜக)

21. இராகம் காம்போதி-அடதாளம்
பல்லவி.

எப்படி நிருவகிப்பேன் சின்மய
மாதவனே சிவனே.

அநுபல்லவி.

கற்பிதம்செய்தநீ காக்கவும் கடனும்
அற்புதனேதில்லை யம்பல நடனு (எப்படி)

தினமுங்கொடிய வாதை செய்தொருக்காலே
மனதைவருத்தும்வஞ்ச மாயையினாலே (எப்படி)

சந்ததந்துன்பமெனில் சகித்திடமுடியுமோ
இந்தத்துயரமெல்லாம் என்றுவிடியுமோ (எப்படி)

இருமலையொருவில்லாய் ஏந்துசெங்கையா
திருமலைஜக்கயன் தினந்தொழுமெய்யா. (எப்படி)

---

22. இராகம் கானடா-அல்லது பைரவி. தாளம் ஆதி

பல்லவி.

கருணாகரா கழல்தந்தெனை நீ காவையனே
கதிவேறில்லை கருணாகரா

அநுபல்லவி.

தருணமிதுவே தமியேனையாள்வாய்
சர்வலோக வாதா ரா வு தா ரா (கருணா)

சரணங்கள்.

அருணசலேசா அமலாவிலாசா
அகண்டபரிபூரண னந்தனே
திருநான்மறையின் சிரமேல்நடனு
தேவாதிதேவா ப்ரபாவா (கருணா)

வஞ்சமாம்ப்ரபஞ்ச மாயாவிகாா
மருளால்நிதம் மனம்வாடினேன்
செஞ்சடாதரா சிவலோகனே
தில்லைவாழ்நடேசா ப்ரகாசா (கருணா)

வானேதிரு மலைஜக்கயனை
மகிழ்ந்தாண்டருள் மாதேவனே
பானேசெழும் பனிமாமலைப்
பாவையொருபா காநிர்மோகா. (கருணா)

(சாமராஜபூபதே நமோ நமோ என்றமெட்டு)

23. இராகம் இந்துஸ்தான்தோடி—சாப்புதாளம்

பல்லவி.

தியாக ராஜ ஸ்ரீயுமாமனோகரா

அநுபல்லவி.

ஏகனேயுமை பாகனேயெழில் நாகபூஷணா
ஈசா நேசா எனையருட்கண்பார் (தியாக)

சரணங்கள்.

சர்வலோகபூஜிதா க்ருபா லையா
சாலவேயநுகூலந்தருநின் கோலமாமலர்த்தாள்
தா தா வேதா தருணந் தருணமே (தியாக)

நீலக்ரீவபால சோமசேகரா
நேமனேநனி கோமளாகர காமதகனனே
நீதா நாதா நிமலசேதனா (தியாக)

திருமலைஜக்கயன் பணிகருணாகரா
சின்மயானந்த நின்மலா என்மேல் வன்மமேதையா
தேவா வாவா சிற்சொரூபனே. (தியாக)

(நாரணதேவா ரட்சித்தருள்புரி என்ற மெட்டு.)

24. இராகம் பங்காளா-ஆதிதாளம்.

பல்லவி

ஸ்ரீகயிலாசா சித்தத்துறை அரஹரஉமாமஹேசா
தில்லையில்வாசா நடராஜா நற்சுயம்பிரகாசா (ஸ்ரீ)

அநுபல்லவி.

சோகமிகுஞ்சகல துன்பங்களுமகல
ஏகனேநீஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)

தீனதயாபரனே திகழ்கருணாகரனே
மீனவனேஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)

பாலவிலோசனனே பாவவிமோசனனே
நீலகண்டாஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)

மூவர்பாடலுகந்த முதல்வனே யர்நியந்த
தேவதேவாஎன் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)
திருமலைஜக்கயன் றன் சென்னியில் மேவுமுன் றன்
இருகழல்தந்தென் சித்தத்துறை அரஹரஉமாமஹேசா (ஸ்ரீ)

(கமலநயனவாசு தேவா பாரோரெங்கபாரோ என்ற மெட்டு.)

25. இராகம் செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

சரணமுனையே நம்பினேனருள் தா தா ஜகநாதா.

அநுபல்லவி.

பிரணவாகர உமைமனோகர பிஞ்ஞகா வரதா (சரண)

சரணங்கள்.

வானவர்பணி தில்லையம்பல வாணுமறைகாணு
ஞானசாகரனே தயாபர நாகபூஷணு (சரண)
பங்கயனொடு மாலுந்தேடிய பாதாசதுர்வேதா
சங்காரவிமலா சதாசிவசந்த்ரசேகரா (சரண)
ஆயிழையார் மோகமாயை யாலேபுவிமேலே
நாயினேனுள மயங்கிடாமலே நன்மையேபுரிவாய் (சரண)
சின்மயானந்தபரிபூரண தேவாஎன்முன்வாவா
அன்புடன்திரு மலைஜக்கயனை யாளுமீசனே. (சரண)

---

26. இராகம் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

பங்கஜபூம் பாதமே பங்கஜ

அநுபல்லவி.

சங்கரபரசிவ தந்தருளுபய (பங்கஜ)

சரணங்கள்.

கிரணமதிகுலவும் இரணகிர்சடில
பிரணவசொரூபனே சரணமுனதுயர் (பங்கஜ)

பூதலமிசைமறு மாதர்கள்மயலற
நீதயைபுரியினி யாதாவுனது (பங்கஜ)

நிலையிற்பொறியென நிலைநிற்பதுதிரு
மலைஜக்கயன்முடி மிலைநிற்புனித (பங்கஜ)

27. இராகம் தன்யாசி-தாளம்ஆதி.

பல்லவி.

ஈசாகனக சபேசா வரதசோ ணேசா சர்வேசா

அநுபல்லவி.

தேசாருமையொடு திகழும்பிரகாசா
சின்மயபரிபூரணபவநாசா (ஈசா)

சரணங்கள்.

நீலகண்டாகருணாகரவிமலா
நித்தியானந்த அருவே
நேமவிரதஜன காதியர்க்குண்மைநெறி
நிகழ்த்தும் பரமகுருவே
காலகாலாதிருக் கயிலைவாழ் நாதா
கடையனேயினியேனும் காக்கவொண்ணாதா (ஈசா)

துங்கவேதாகம முதல்வா நறுமலர்
தூவியன்பொடு நாளும்
துதிபுரிந்தேயறு பகைதீர்புனிதமெய்த்
தொண்டர்கள் தமையாளும்
செங்கமலநேர்சரா சேவிதசரண
திவ்யதேஜோமய சேஷாபரண (ஈசா)

தற்பரதீன தயாளாதிருமலை
ஜக்கயன்தினம் போற்றும்
சம்போசங்கர தஞ்சமென்றடைந்தோர்
சஞ்சலங்களை மாற்றும்
சிற்பரனேதில்லை சிதம்பர தேவா
தினமுனைப்பணியும் சிறியன்முன்வாவா (ஈசா)

28. ஸ்ரீராகம்-ரூபகதாளம்.

பல்லவி.

கருணைசெய்குவாய்
காமதகன நேமனே என்மேல் (கரு)

அநுபல்லவி,

தருணம் எனையாள் உனதுபங்கயத
தாளிணையே நம்பினேன் தேவா. (கரு)

சந்த்ரசேகர நீலகண்ட
தாணுவே மகேசனே தேவா. (கரு)

சிற்பரசுகாநுபோகா
திவ்யஞான போதனே தேவா (கரு)

ஜெனன மரண வாதையாலே
சிந்தைகலங்கி வாடினேன் தேவா (கரு)

திருமலைஜக் கயன் போற்றும்
தேவியுமை மனோகரா தேவா (கரு)

(சரணம்ஐயா நட்சேத்திரையா என்ற சத்தியபாஷா
அரிச்சந்திரநாடக மெட்டு.)

29. இராகம் நாதநாமக்ரியை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சங்கரா கங்காதரனே
தாணுவே சர்வேஸ்வரனே
திங்கள்அணி வேணியனே
திரிசூல பாணியனே (சங்)

சுத்தனேபுர நாசனே
தொண்டர்கள் இதயாசனே
அத்தனே திரிலோசனே
அடியார்பவ மோசனே (சங்)

பூதிஅணி அரனே
பொன்னார்கிரி தரனே
ஆதியேகுரு பரனே
அம்பிகைமணு கரனே (சங்)

சிற்பரா தயாநிதியே
சிறியேனை ஆள்நிதியே
தற்பரா சபாபதியே
சந்ததம் நீயே கதியே. (சங்)

திருமலைஜக் கயன்றன்
சென்னிதனில் சூடும் உன்றன்
மருமலர்ப்பாதம் என்றன்
மனம்அக லாதே என்றும் (சங்)

---

30. இராகம் கல்யாணி—சாப்புத்தாளம்.

பல்லவி.

நடேசா சரணம் சரணம் ஸ்ரீ (நடே)

அநுபல்லவி.

தடாதகைமணவாளஒங்கர
கடாசலஜன சாதிகம்பர
சராசர முதல் வாபரம்பர
அராவணி புய னேசிதம்பர (நடே)

சரணங்கள்.

அரியுடன்வேதா நான்மறைகட்கும்
அரியபொற் பாதா
ஆரணபர மாகிர்மோகா
ஆரசேகா தூயதேகா
ஆலவாய்அர சேதியாகா
ஆதியேஅடி யேனைநீகா (நடே)

கனிந்துனைப்பாடேன் நல்வினைகளைக்
கனவிலும் நாடேன்

கரியஅலை கடல் உலகில்நிலமொடு
கவினும் அரிவையர் நிதியில்மயல்கொடு
கடுவளியிலுறு சருகில் அலைபடு
கடையனுய்ய உன துபயகழல்கொடு (நடே)

அனகமா தவனே திருமலைஜக்
கயனை யாள் சிவனே
அடியனைத்தினம் மருவுதொல்லை
அநுசரித்திட முடிய வில்லை
அருள்செய்உத்தர சயில வில்லை
அணிமலர்க்கரம் இலகு தில்லை. (நடே)

ஆனந்தக் களிப்பு.

31. இராகம் நாதநாமக்கிரியை-சாப்புத்தாளம்.

பல்லவி.

பஜனைசெய்வாய் மட மனமே—மிகு
பக்தியுடனே பணிந்தனு தினமே. (பஜ)

அநுபல்லவி.

சுஜனசங்கத்துடன் கூடி—மனத்
தூய்மையாய் இகபர சுகமுறநாடி
நிஜமாங் கனக மன்றுளாடி—நிற்கும்
நிமலன்திரு நாமசங் கீர்த்தனம்பாடி (பஜ)

பக்தியில்லார் வாழும் வீடு—புலி
பாம்பு காடிமுதல் மிருகம்வாழ் காடு
நத்தும் மெய்யடியவர்க் கிடு—தேவ
நாட்டிலு மில்லைகீ உள்ளன்பினோடு (பஜ)

நிருமல அன்பர்தம் நேசன்—அவர்
நெஞ்சகந் தன்னிலே நித்யவாசன்
திருமலைஜக் கயதாசன் துதி
செய்ஜன காதியர்க் கருளுபதேசன் (பஜ)

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SW... LIBRARY,
...DRAS-41.

TIRUVANMIYUR :: MADRAS-41.

(பரு லன்னமாடலாடவத்து என்றமெட்டு.)

32. இராகம் பைரவி-தாளம் ரூபகம்.

பல்லவி

உன்னையோநா னம்பினேனே யுமைமணாளனே தினம் (உன்)

அநுபல்லவி.

அன்னைபிதா தெய்வமும்நீ யன்றியா னையா
ஆதரித்தெனை யாண்டருள்வா யமலனேமெய்யா தினம் (உன்)

சோதிமதி வேணிபுனை சுந்தரேசனே
தூயசதுர் மறைகள்தேடும் சுயம்ப்ரகாசனே தினம் (உன்)

நேமந்தவிரும் காதகர்பால் நேயம்நாடியே
நிலைகலங்கி வாதையாலே நெஞ்சம்வாடியே தினம் (உன்)

பரிவுடன்திரு மலைஜக்கயன் பரவும்பாதனே
பண்ணவர்சுரர் புரிதியான பரமநாதனே தினம் (உன்)

33. இராகம் காபி—ஆதிதாளம்.

பல்லவி.

தேவாஎன்றன் மீதுகருணை செய்வாயிப்போதே ஆ (தேவா)

அநுபல்லவி.

பூவார்கொன்றை புனைசதுர்வேத
போதாநீகதியே ஆ (தேவா)

அஞ்சலென்றேயெனை யாள்வதற்குன்றனை
யல்லால் வேறிலையே ஆ (தேவா)

பொருந்தியபசுவைப் பிரிந்ததோர்கன்று
போலேவாடுகின்றேன் ஆ (தேவா)

திருமலைஜக்கயன் சிந்தையில்மேவும்
தீனதயாபரனே ஆ (தேவா)

(இத்தனை கோபமாகுமா என்றமெட்டு.)

34. இராகம் பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

சச்சிதானந்தரூபனே சச்சி

அநுபல்லவி.

பச்சைநிறமேனி நிகழ் அச்சுதனயன் முதலோர்
நச்சியகலாதரனே உச்சிதமெய்ஞ்ஞான (சச்சி)

சாதனைசேர்மெய்யடியார் வாதனை தவிர்த்தருளும்
சீதளநறுங்கமல பாதமே கதியே (சச்சி)

ரஞ்சிதநலமேத ருஞ்சிதம்பரநாதா
சஞ்சிதவினையகற்றும் குஞ்சிதபதம் தா (சச்சி)

செக்கசெழில்மேனியனே முக்கணனேயெந்நாளும்
அக்கரையாய்த்திருமலை ஐக்கயனையாளும். (சச்சி)

(கமலநயனாரணி கடினபயஹாரணி என்றமெட்டு.)

35. இராகம் கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

கனககிரிதரனே ஜனகமனோஹரனே
கங்காதரனே சங்கரனே

அநுபல்லவி.

அனகசுக்யாண புனிதநியாண
அரஹரமோண பிரதாண (கனக)

சரணங்கள்.

அரவாபரணா பரமகல்யாண
அம்பலவாணா பிரவீணா
வாத நியமா சாதகீர் மோகா
வந்தெனை நீகா வளர் யோகா. (கனக)

திருமலை ஐக்கய ஹிருதய வுதய
தினகர வபய பத வுபய
பரிபவ நாசா சிரகிரி வாசா
பார்வதி நேசா பரமேசா. (கனக)

(குகநாதா சண்முகநாதா மௌனதேசிகநாதா என்றமெட்டு.)

36. இராகம் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

பரதேவா சங்கரதேவா சோமசுந்தரதேவா சுரதேவா
வரதேவா பரதேவா

அநுபல்லவி.

அரவாபரணா அம்புஜசரணா (பரதேவா)

சரணங்கள்.

மலர்மிசைவேதா மால்பணிநீதா
மனமென்றன் மீதிலிரங்காதா
சுக போதா ஜகநாதா (பரதேவா)

அமரர் சகாயா அன்பர்பால் நேயா
அருமறை துதிபுரி தூயா
திரு வாயா அருள் தேயா (பரதேவா)

திருமலை ஜக்கயன் தினம் பணிதியாகா
திகழ் புவனாம்பிகை பாகா
புனை தேகா எனை நீகா (பரதேவா)

(மாதவமே தவமே என்ற மெட்டு.)

37. இராகம் தேசிகதோடி-ரூபகதாளம்.

பல்லவி.

சேவடியே கதியே சிற்சொரூபானந்த
அற்புதனே யுன்றன் சேவடி

அநுபல்லவி.

மேவுபேரின்ப ஞானமோங்கவும்
விரவுதாமத குணப்பின்வாங்கவும்
தாவுசஞ்சல மனைத்தும்நீங்கவும்
தற்பரனேகரு ணைவெள்ளந்தேங்கவும் (சேவடி)

விமலஹிதய கமலமதனில் மேவுமனா சேதனா
அமலனேபல சமயமுதல்வ னாவேதபுராதனா.

சிமயமாதுமணாளாவெனது சிறுமையால்மிகவாடுதென்மனது
சமயமெனையாள்குமான்றனது தந்தையேயாவிந்தம்நேருனது. (சே)

வஞ்சமாம்பிர பஞ்சமாயையின் வாதையால்மிகவெம்பினேன்
அஞ்சலென்றெனை யாதரித்தருள் அத்தனேயுனைநம்பினேன்
தஞ்சம்வேறிலை திருக்கண்மணியும் தவளநீறுமெய்தன்னிலணியும்
செஞ்சடிலா நின்தொண்டிற்றணியும் திருமலைஜக்கயன்தினம்பணியும்

38. ஹைச ஜாத்து டாலாமியா என்ற இந்துஸ்தான் மெட்டு

பல்லவி.

இன்னம் நீயென் மேலே மெய்யா
என்ன கோபமோ ஐயா

அநுபல்லவி.

பன்னகாபரண ஜெகதீசனே
பரமாநித்யா ஒநடராஜனே ஐயா (இன்)

சரணங்கள்.

நின்னையேநம்பினேன்கதி நீயல்லாமல்யாரையா
என்னைநீவந்தாள்வா யுமைபாகனே
ஏழையேனென்செய்வேன் மௌனயோகனே ஐயா ஆ (இன்)

ஜெகமாயையாலேதினம் சிந்தைவாடினேனையா
சுகாதிமேலோர் தொழும்நீதனே
தொண்டனேற்கருள்கூர் சதுர்வேதனே ஐயா ஆ (இன்)

திருமலைஜக்கயன்சொல் தேவதேவனே ஐயா
கருணாகரனே சர்வகாரண
காமவேள்தகன பரிபூரண ஐயா ஆ (இன்)

(நாராயண நன்னுகாவவையா என்றமெட்டு.)

39. இராகம் நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சம்போசிவா தமியேனையாள்வாய் சம்போ

அநுபல்லவி.

அம்போருகன்மால் அமரர்பரவும் (சம்போ)

சரணங்கள்.

சர்வலோகநாதா சதுர்மாமறையின்
தலைவாமஹேசா சசிசேகரா
நிர்விகாரபோதா நிமலாகருணா
நிதியேதினம் நின்னையேநம்பினேன் (சம்போ)

கனமாயையாலே கலங்கியுன்பாதம்
கருதாதுழன்ற கடையேனையா
வனமேயணியும் வரதாதிரு
மலைஜக்கயனை மகிழ்ந்தாண்டருளும் (சம்போ)

---

40. இராகம் தன்யாசி-தாளம் ஆதி.

பல்லவி.

மனமேநீ மானங்கெட்டு வயிறுவளர்க்காதே

அநுபல்லவி.

தினமும் நாய்களு மலந்தனை யுண்டு
ஜீவனம் செய்யவில்லை யாஅது கண்டு (மனமே)

சரணங்கள்.

உணர்விலாதகாடு றைந்திடு மிருகம்
உறவாம்பெட்டைதனை வேறொரு மிருகம்
புணரச்சகித்திடா தேயந்த மிருகம்
போதாதேயுனக் கிணையெந்த மிருகம் (மனமே)

பெண்டுபிள்ளைகளைப் பிறர் சேர்ந்திடவே
பிரியமுற்றாயவர் தினம் சார்ந்திடவே
தொண்டுசெய்துநீ கை தேர்ந்திடவே
துணிந்தாயேகன பழி நேர்ந்திடவே (மனமே)

பிணவீக்கம்போற் றசைமிகத் துன்றி
பெரியமனிதனா னாயே யன்றி
குணமதிற்பெரியவ னோசேர் குன்றி
குறுகியவுனக்கீ டோவூர்ப் பன்றி (மனமே)

வரையில்வைத்தவிளக் கெனவுன் குட்டு
வையகமெல்லாம தெரியவுனக்கு மட்டும்
தெரியாதாஇப் படியுஞ்சுரணை கெட்டு
திரிவாருண்டோ வெட்கங்கக்கத்தி விட்டு (மனமே)

மானமழிந்தபின்பு மலைபோலே பணம்
மாடாடுகளொடு மருவியவங் கணம்
தானிருந்தாலுமதிற் சற்றுமில்லை குணம்
தாரணிதனிலே யவனைநடைப் பிணம் (மனமே)

வழங்குகவரிமான் ஒருமயிர் கேடு
வந்தாலுயிர்மடித் திடுமடி யோடு
மழுங்கவேமயிர்கத் தரிக்கினும் நீடு
மயிர்போச்செனமகி ழுங்குறும் பாடு (மனமே)

உன்னைநிர்ப் பியாத தகனால் நாணாய்
ஊர்சீசியென வுரைப்பது காணாய்
அன்னவர்சொல்லுமப கீர்த்தியே பூணாய்
அணிந்தாயேவா யுனக்கேன் வீணாய் (மனமே)

சங்கதிகளையா னறிந்ததிற் கொஞ்சம்
சாற்றினேன்பழிச்சொல் லோகொடு நஞ்சம்
நங்கவில்லையா இன்னமுன் னெஞ்சம்
நான்றுகொள்ளச்சாண் கயிறா பஞ்சம் (மனமே)

மானங்கைவிடா தேஒரு போதும்
மாதேவன்பத மாமிரு போதும்
ஆனபெருமைதரு மதைமுப் போதும்
அன்பொடுபணிவா யானாற் போதும் (மனமே)

திருமலைஜக்கயன் சொலுங்கவி மருந்து
செவிவாயாகத் தெவிட்டநீ யருந்து
புரைதருபழிச்சொல் லெனுநோய் பருந்து
போற்பறந்தோடுமுன் னிடத்தினி விருந்து (மனமே)

(மாதவனே நெடு மதுரநுவினில் என்றமெட்டு)

41. இராகம் ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரனே திகழ் சதுர்மறைமுடிமிசை நிதிபெறநடமிடும் சங்கரனே.

அநுபல்லவி.

துங்கமுனிவரர்கள் சுரர்தினம் போற்றும்
தூயவனேயடியர் துயர்களை மாற்றும் (சங்கர)

பன்மதபேதம் பாரில்விவாதம்
நின்மலபோதம் நினதுபொற்பாதம் (சங்கர)

பவளமென்கொம்போ படர்களம்கம்போ
இவள்விழியம்போ என்றேன்சம்போ (சங்கர)

அரியுடனேவிதி அனுதினமுந்துதி
புரியுமுமாபதி பூவில்நீயேகதி (சங்கர)

தாழ்வகல்திருமலை ஜக்கயன்மனநிலை
வாழ்சிவனேகலை வனையுமுயர்கயிலைச் (சங்கர)

காமாக்ஷியம்மையார்பேரிற் கீர்த்தனம்.

---

42. இராகம் மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஞானசுந்தரி மாதரி காமாக்ஷி யுனை
நம்பினேனெனையாதரி

அநுபல்லவி.

வானதியணையகம் பாரதிமேவிய
வரகுணவற்புத க்ருபாகரி
மருவுசுலக்ஷண தயாபரி (ஞான)

சரணங்கள்.

பங்கஜாசன நல்வாணி பின்னைமுதலோர்
பரவும்நித்தியகல்யாணி

வெங்கஜானனனெழில் தங்குங்குக னுடைந்த
மேவுஞ்சராசரங்கள் விளங்கிடவே தந்த
சங்கரிவேயணையிற் பொங்கமுடன மர்ந்த
ஜகரக்ஷகி யரிசகோதரி
புகல்நறசசி தவழ்ஜடாதரி (ஞான)

மகிமைவளருஞ் சிங்காரி வஞ்சமேமிக
வளர்க்குமகிட சங்காரி
பகரும்நான்மறைகளும் புகழுங்கரகபாலி
பாவலர்தமக்கருள் பாலிக்கு மனுகூலி
அகிதவஞ்சர்மருமம் வகிர்செயுந் திரிசூலி
அக்ஷயசுபகர வபிராமி
கச்சிநகரிலுறைசிவகாமி (ஞான)

அரவங்கணி மாதங்கி திருமலைஜக்
கயனென்னுளத்தில் நீதங்கி
கரதலாமலகம்போற் சிரமமனைத்தும் நீங்க
காக்ஷிகொடுத்தெனது கருத்தில்மகிழ்ச்சியோங்க
வரமுதவியும்பாதம் சிரமிசையான் தாங்க
வைத்தருள்புரிதிரிவி லோசனி
பக்தர்களது பவ விநாசனி (ஞான)

சுப்பிரமணியர்பேரிற் கீர்த்தனங்கள்.

—o—

கடதேரராதாமனஸா—என்றமெட்டு.

43. இராகம் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவசாமிநாதா சரணம் சிவசாமி

அநுபல்லவி.

பவசாகரத்திற் படிந்துழலுமென்மேற்
பாராமுகம்செய்யாதே பரங்கிரிநிவாஸ (சிவ)

சரணங்கள்.

தஞ்சம்வேறில்லை தமியேனையாளத்
தருணம்தருணம் தடையேதையா
அஞ்சலென்றெதிர்நின்றே யனவரதமும்நீ
அடிமைகொண்டெனைத்தேற்றி யாதரிக்கவேணும். (சிவ)

நத்தினேனுனை நலந்திகழுமுன்றன்
நறும்பூங்கழலிணை பெறநாடியே
பத்திநெறியிற்கூட்டிப் பதிதனெனையாள்வாய்
பழமறைக்குமெட்டாப் பரப்பிரமசொரூப (சிவ)

இனியாகிலும் எளியேன்கடைத்தேற
வதாகிலுமோர்வகை சொல்லையா
தனியானமோன சாதனைதெய்வானை
சமேதாதிருமலைஜக் கயனைரக்ஷிக்கும் (சிவ)

---

44. இராகம் பீல் பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

மலரடிதந்தாண்டருளையனே
மௌனதேசிககுக னேபன்னிருகையனே

அநுபல்லவி.

சிலைமகள்புதல்வா கலைபகர்முதல்வா
சேவலனே செந்திற் காவலனே
சிந்தையால்வெம்பினேன் உன்றனையேநம்பினேன்
செவ்வேளே தருணம் இவ்வேளையுன்றன் (மல)

சற்குணம்விடுத்த துர்க்குணம்தொடுத்த
சண்டாளனென்றெனைத் தள்ளாதே
சரவணபவநாதா குரவணியும்விநோதா
தயைபுரிவாய்கபடங் கொள்ளாதேயுன்றன் (மல)

இன்பமும்சிலநாள் துன்பமும்சிலநாள்
என்பதுமென்னளவிற் பொய்தானோ
இரங்கவில்லையாமனம் பாங்கிரியானே தினம்
ஏழையடியேன்மனம் நைவேனோ வுன்றனன் (மல)

செஞ்சுடர்வேலா ரஞ்சிதசீலா
திருமலைஜக்க யனுக்கநுகூலா
சிறுமைசெய்திடும்சோக வறுமைமுழுதும்போகத்
திருக்கடைக்கண்பார்பசு பதிபாலாவுன்றன் (மல)

---

45. இராகம் சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

கருணாகரதிவ்ய தேஜோமயாநந்த
கந்தசாமீ வந்துகா

அநுபல்லவி.

வருணாதிபேத மடங்கலும்நீத்து
மருளகற்றி யருள்மிகுத்த முனிவர்கள்
மகிமை வளரு மிதய மனையி லிலகிய (கருணா)

சஞ்சலமேதரும் வஞ்சியர்மேலே
தாழாமயல்கொண்டு தவித்தொருக்காலே
நெஞ்சம்தளர வஞ்சம்வளர
நினைவழிந்த எனது சிந்தை நிலைபெற
நீத வேத போத சீத பாதனே (கருணா)

என்னபிழைசெய்யினு மிரங்கித்துடனே
இரங்கியடியேனைப் பேற்றலுன்கடனே
சின்னம்சிறியேன் நன்மையறியேன்
சிறுமைதீர பெருமைசேர மகிழ்வொடு
சித்த சுத்தி புத்தி வித்தை யுற்றிட (கருணா)

ஜெகபரிபாலன சிவைமகிழ் பாலா
திருமலைஜக்கயன்சொல் செஞ்சுடர்வேலா
குகவிசாகா சிகரவாகா
குறவர்தங்கள் மரபில்வந்த நலமிகு
கொங்கு தங்கு கொங்கை மங்கை கொண்கனே. (கருணா)

(என்றனிடம் வந்தவரை ஏனழைத்தாயடி என்றமெட்டு.)

46. இராகம் பாசு-சாப்புதாளம்.

பல்லவி.

சந்ததமு முன்றனிரு தாள்கொடுத்தாளெனை—சந்தத

அநுபல்லவி.

மந்திரதந்திரசு தந்தரமானகந்தனே (சந்தத)

சரணங்கள்.

ஆதியானகன்மமா அடிமைநான்விண்ஜென்மமா
எதின்னமும்வன்மமா இது தன்மமா
வாதையால்மிகவெம்பினேன் வாதாவுனைநம்பினேன் (சந்தத)

சித்தமென்னகல்லையா சிறிதுமிரங்கல்லையா
நித்தமிந்தத்தொல்லையா நீ சொல்லையா
கத்தனேநீபரிந்து கருணைமிகப்புரிந்து (சந்தத)

மருவுசிவன்மகனே மாமன்றன்மருகனே
தருமௌனதேசிகனே சண் முகனே
திருமலைஜக்கயன்மேல் சித்தமிரங்கி யன்னைபோல் (சந்தத)

---

47. ஏமிசேது எடுலசைது என்ற ஜாவளி மெட்டு.

பல்லவி.

போதும்போது மென்றன்மீது வாதுசெய்வதேதையா

அநுபல்லவி.

ஓதுமாதிநான்மறைகளும் ஓம்ஙளும்பிரணவாகாரதுயர் (போதும்)

சரணங்கள்.

சற்றுமோய்வி லாமலேயெனைச் சஞ்சலமிகவாட்டுதே
முற்றுமிந்த வாதைசகிக்க முடியுமோஜகதீசனே வன்மம் (போதும்)
அன்னையின்றி மைந்தர்தம்மை யாதரிப்பவராரையா
உன்னையன்றி யெனக்கோர்துணை யுண்டோபவநாசனேயடி (போது)

அடிமையாம்திரு மலைஜக்கயனை யாளும்பழநியூரனே
மிடிமைகோயெலாந் தவிர்த்தன்வேலனேயுமைபாலனே துன்பம்(போ)

---

48. ஆதிமூலமான விக்கினேஸ்வரா நமோ என்றமெட்டு.

கண்ணிகள்.

மெய்ஞ்ஞானகரு ணாகரஸதா மோன தேசிகா
வானவாறு தினமேபணி த்யான பூஜிதா
உன்னையன்றி வேறுகதி பின்னை யேதையா
முன்னைவினை யோவென்மீதி லென்ன வாதையா
அமரர்பிரா ணிடர்தீர்த்த சமர வேலனே
ஆதியந்த ரஹிதபரஞ் சோதி பாலனே
இன்னமிந்த வன்மமென்று லென்ன செய்குவேன்
இப்படிச்செய் தாலெவ்வித மேழை யுய்குவேன்
சிகரசிவாத் திரிமேவும் சிவகுரு நாதா
திருமலைஜக் கயன்போற்றும் திகழ்மறு நீதா

(காமினி வினவே யிபுடு என்ற ஜாவளி மெட்டு.)

49. இராகம் சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

தாமதம்செய்யா தேயிப்போதே அருள்
தா தா விதுசமயம்

அநுபல்லவி.

காமதகனன்சேயே நீமனமிரங்கியினி (தாமதம்)

சரணங்கள்.

அன்பர்கள் தமைச்சூழும் துன்பமறவே நீக்கி
இன்பமுறவே காக்கும் தென்பழநிவேலாநீ (தாமதம்)

தஞ்சமுனையன்றியிலை யஞ்சலென்றடியேனை
சஞ்சலம்தவிர்த்தாளுந் செஞ்சரணை நம்பினேனே (தாமதம்)

குக்குடமிலங்குதுவ சக்கரனே திருமலை
ஜக்கயனையாண்டருளு மிக்ககருணாகரனே (தாமதம்)

---

50. இராகம் கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

திருவருள்புரிகந்த ஸ்வாமியே-நீயேகதியல்லாமல்
திக்குண்டோ ஆனந்தநேமியே.

அநுபல்லவி.

கருணைபொழியுஞ்செம்பொற்றாளா காமனுதவுதெய்வானைமணாளா
மருவமர்கடம்பணிதிண்டோளா மாமறைபோற்றிடும்தீனதயாளா
மதியும்புனலுங்கொன்றையின் மலரும்புனையுஞ்செஞ்சடை
மலியும்பரமன்றன்சுத மவுனந்திகழும்சுந்தா (திரு)

மண்ணில்வடிவிழிமாதர்மோக மயக்கறுத்தென்றன்வல்வினைபோக
புண்ணியர்பாலெனைக்கூட்டியனேக புத்திவித்தைதந்தேயஷ்டாங்க [யோக
பொதியைக்குறுமாமுனிமன மகிழக்குருவாகியமிகு
புனிதக்குமராவநுதின மிசைபெற்றிடநீதயவொடு (திரு)

இன்னமென்முன்வரத்தாமதமேது இடர்சகிக்கவென்னால்முடியாது
வன்னக்கலாபமயூரத்தின்மீது வந்துதரிசனம்தந்திப்போது
மடமைத்தன மகலச்சிவ னடியைத்தொழு மிகுபத்தியென்
மனதிற்குடி புகவற்புத மகிமைப்பிர பலசித்திய (திரு)

சித்திதரும் சிங்காரவேலா திருமலைஜக்க யன்பணிசீலா
பத்திசெயுமன் பருக்கநுகூலா பர்வதராஜ குமாரிதன்பாலா
பரிந்துநிறைந்துசுரர்தினம் விழுந்துவணங்குதிருமுடி
படிந்துசிவந்தபதமலர் நினைந்துதிருந்தவாமது (திரு)

---

51. இராகம் காம்போதி-அடதாளம்.

பல்லவி.

மயில்வாகனனேகூ ரயிலாவடியேன்முன்
வந்துகாத்தருளையா

அநுபல்லவி.

அயிலாமாமுலை குயில்தாவிமாசலை
ஆட்கொளையருளிய கோமளதேகனே (மயில்)

சரணங்கள்.

வருமாகுலமெனும் திரைவீசியமோக
வாரியில்வீழ்ந்துநொந்தேன் நாளும்
திருமாதவர்வந்து மருமாமலர்தூவும்
சீரடிப்புணை தந்தே
இருமாதிரமிசை பெருவாழ்வுடனிசை
எய்தும்படிகிருபை செய்துசந்ததமுமென்
இதயமாமனை யதனிலேகுடியா யிருந்தருள்
இந்திராதியர்பரவுமேகனே கந்தனேகுகனேவிசாகனே (மயில்)

ஏதாயினுங்கதி நீதானெனநெஞ்சில்
எண்ணினேனிதுபொய்யா வகை
ஓதாயெனக்கினி யாதாரமுனையல்லால்
உண்டோசொல்முருகையா
தீதாகியவெய்ய சூதாதிகள்செய்யும்
தீயருறவுதீர்த்து தூயர்குழாம்சேர்த்து
சிறுமையுங்கொடு வறுமையுங்கதிர்முன் திமிரமாக
தீவினைத்தொடரகலமுத்தமிழ்நாவினுற்றிடவரமளித்திட (மயில்)

கொந்தாருங்கடப் பந்தாராதேவ
குஞ்சரிமண வாளா கமழ்
சந்தாடவிசூழும் செந்தூரதிருமலை
ஜக்கயன்பணி தாளா
முந்தாலடியிலமர்ந்தேஜனகன்முதல்
முனிவருளம்விளங்க இனிதாகவேதனி
மோனமேதரு ஞானசாதனமே ஓதாதுணர்த்திய
முக்கணக்கர்பயந்தசேயே இக்கணத்தில்விரைந்துநீயே (மயில்)

(சக்களத்தி கைகேசியால் சார்ந்தவருத்தம் என்றமெட்டு.)

52. இராகம் பியாக்-ரூபகதாளம்.

பல்லவி.

என்னகுறை சொன்னபோதிலும்
இன்னமும் வாதா மன மிரங்கலாகாதா.

அநுபல்லவி.

வன்னந்திகழு மன்னஞ்செறியு மாவயலூரா தில்லை
பொன்னம்பலவர் முன்னம் பிரணவம் புகன்றமாயூரா—எப்
பொருட்குமாதாரா (என்ன)

நிகரிலா மிகு மகிமை சேர்சைவ நெறிதனிற்சென்று நல்ல
இகமொடுபர சுகமுமெளியேன் எய்தமுன்னின்று வரம்
இனிதுநல்கென்று (என்ன)

பனிமென் கடம்பு புனைநின்னெழிலும் பரிபுரத்தாளும் மனக்
கனிவுடன்றினம் நனிதொழுமன்பர் கவலைதீர்த்தாளும் நீயே
கதியெனநாளும் (என்ன)

சுந்தரமிகு கந்தநளின தூயபொற்பாதா அன்பாய்ச்
சந்ததந்திரு மலைஜக்கயன்சொல் தமிழ்புனைநீதா—சிவ
சண்முக நாதா (என்ன)

---

53. செலியாலா போப்போ பொம்மனவே என்ற ஜாவளியின் மெட்டு

பல்லவி.

குகநாதாவென்மீது வன்மமா குகநாதா

அநுபல்லவி.

மிகு கருணை முக சுகுண புகலவொணு (குகநாதா)

சரணங்கள்.

என்னமுறைபகர்ந்து மின்னமென்மீதுன்
இதயமிரங்காதா பதவிதரும்பாதா முதுமறைபணி (குகநா)

சஞ்சலம் நாளும்நாளு மிஞ்சவைப்பதுனக்கு
சம்மதமா முருகா செம்மலர் மான்மருகா பெம்மானே (குகநா)

தாசனும் திருமலைஜக் கயன் றமிழ்க்கு
தாழ்வணுகாதவிதம் சூழ்வினைபோகநிதம் வாழ்வருள்வாய் (குகநா)

(செலிமனக்யாலவானி தோனிபொர்து சாலுனே என்ற ஜாவளி மெட்டு.)

54. காபி ராகம் - ரூபக தாளம்.

பல்லவி.

கருணைசெய்திவ்யரூபமோனகந்த நாதனே
மோனகந்தநாதனே மெய்ஞ்ஞானகஞ்ச பாதனே

அநுபல்லவி.

என்னதுயர்சொன்னபோது மின்னமென்மேல்வன்மமா
இன்னமென்மேல்வன்மமாசர் வேசனேயிதுதன்மமா (கருணை)

நீவினையேனென்றன்மீது சித்தமிரங்கவில்லையா
சித்தமிரங்கவில்லையாதுயர் தீரவோர்வகைசொல்லையா (கருணை)

சந்ததந்திருமலைஜக்கயன்சொல் தமிழ்புனைமுருகையனே
தமிழ்புனைமுருகையனேஎழில் தங்குபன்னிருகையனே (கருணை)

---

55. இராகம் பைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

இனியாகிலு மெனையாதரித் திடுவாய் குமரேசனே இனி

அநுபல்லவி

அநியாயமாய்த் தனியாக நான்
அனவாதமு மெலிவேனோ கனவாதனே பகைநாசனே (இனி)

சரணங்கள்.

எத்தனைநா ளெனவடியேன் இத்துயர்களைச்சகிப்பேன் ஐயா
எந்தவிதமாகமன மிசைந்தேழை நிர்வகிப்பேன்
சுத்தமௌன தேசிகனேகை சோரவிட்டிடாதேதிகழ்
தோகைமயில்மீதாகிய தூயசோகனகபதா நேயமா விமலசுதா (இ)

மானமில்லாநீசரைக்கன வானாகவே மதித்தேன் ஐயா
மானுபாரணரைநெஞ்சினில் மதியாதவமதித்தேன்
ஞானஞ்சிறிதுணராமலே நாயேன் கடையானேன்மிகு
நலமேயருள் தருணங்குக நாதா வேதாபாவிய நீதா வாதா அனுதி
[னம் (இ)

இன்னமென்றன் மீதுன்மன மிளகா வகையேதோ அம்மா
ஏனோதானோ வெனநீ யிருக்கிறாயிது ஞதோ
சின்னஞ்சிறியேனலமிடர் தேரேன்வகை யோரேனனி
திருமலைஜக்கயனை வாழ்விக்கும் சேமாவாமா சதிசெய லாமாநேமா
[தயவொடு (இனி)

56. இராகம் நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தவேளை நீ மனஞ்சற்று மிரங்கிடாவகையேதுசொல்லையா

அநுபல்லவி.

சுந்தரநீல கந்தரர்பால துங்கவைவேலனே யெழிற்
கந்தனேயுயர் தந்திசகோதரா
காங்கேயனே முருகையா பாராசலா (இந்த)

அம்புவிமேலே ஆகுலத்தாலே ஆகமெலிந்துநான்தவிக்கவோ
வம்புலாவிய கும்பமாமுலை
வள்ளிதெய்வானை மகிழ்மணவாளனே (இந்த)

கொங்கமர்வாகா கோமளதேகா கும்பமுனிக்கருள் போதனே
பங்கயாசன மங்கைமருகனே
பார்வதிபுத்திரா பன்னிருகையனே (இந்த)

பாமான்மீது பரிந்திப்போது பக்ஷம்வைத்தாள் குமரேசனே
தாமனேமிகு வாமாதிருமலை
ஜக்கயன்போற்றுஞ்சலச பொற்பாதனே (இந்த)

57. இராகம் கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

நானுனையே நம்பினேன்வேலனே.

அநுபல்லவி.

வானவருடனுயர் மோனமுனிவர்பணி
ஞானகுருவேயடி யேனைநிர்நீ
வாவா குக தேவா திகழ் மகானுபாவா (நானுனை)

மதியறுகொடுகுளிர் நதியணிசடையுமை
பதியருள் சுதநீ கதியினமும்
வரதா மறு நீதா சிவசண்முகநாதா (நானுனை)

ஆரணமதிலுறை பூரணனேசருவ
காரணனேதுவச வாரணனே
ஐயா மிகு துய்யா பன்னிருமலர்க்கையா (நானுனை)

தாமதகுணமய பாமரர்களையணு
காமலருள்புரிவாய் வாமமலர்த்
தாமா கன நேமா எனைக்கைவிட லாமா (நானுனை)

தக்கவுனக்கடிமை புக்கவன்திருமலை
ஜக்கயனுய்ந்திடவே மிக்கவரம்
தாதா மலர்ப் பாதா குறமகள்ச மேதா (நானுனை)

---

58. இராகம் நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

சிவாசலாமா நடனமயூரா திருவருள்புரிவாய்குகா

அநுபல்லவி.

தவாதபிணியால் ஓயாமிடியால் தளர்வேனோஇதுதகா
தமியேன்மிசைதயை செயாமலிருப்பது சம்மதமா சண்முகாஓ (சி)

பலவிதமாயா விகாரவலையிற் பக்ஷிபோலவென்மனம்
படாமலருள்நின் த்யானதாமே பக்தபவவிமோசனம் ஓ (சி)

ஜெனனமரணநோ யுறுத சற்ஜன சேவித கருணைபதம்
தேடியறியவகை யிலாதவடியேன் தெரிசித்திடவேஙிதம் ஓ (சி)

மாசிலாமவுன திடமாதவர்முன் மகிழ்வுடனெதிரே வரும்
வரதாதிரு மலைஜக்கயன் வாழவேகிருபை தரும் ஓ (சி)

---

59. இராகம் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

ஓ வேலவா உசிதாமயூரா ஓ வேலவா

அநுபல்லவி

தேவா வரதா சின்மய ஸ்வரூபா (ஓவேலவா)

சரணங்கள்

காமாதிமோகக் கடலினிடைமூழ்கிக்
கலங்குமென்னை நீ கரையேற்றவேணும் (ஓவேலவா)

மாயாவிகார மயல்தீர வென்முன்
வந்தாலுன்பதும மலரடிகள்நோமோ (ஓவேலவா)

எப்போதுந் துன்பம் என்றாலின்பமெங்கே
இனியாகிலும்வந் தெனையாளொண்ணாதா (ஓவேலவா)

சன்மார்க்கநீதி தவறாதவர்க்கு
தனதாதிருமலை ஐக்கயன்றுதிக்கும் (ஓவேலவா)

---

60. இராகம் தசாவந்தி-ஆதிதாளம்.

பல்லவி.

தஞ்சமுனைநம்பினேன் அஞ்சலென்றெனையாள்வாய்
சாமிசண்முகநாதா

அநுபல்லவி.

செஞ்சலசந்திகழு மஞ்சன நிறை கயம்
செறியும்பழநிவாழும் தேவாவுனக்கபயம் (தஞ்ச)

சரணங்கள்.

ஒன்றிரண்டாபலவாய்த் தோன்றும்சமயபேதம்
உலகிலிதுபிர மாதம்
சென்றுசைவநெறியிற் சேர்வதுவே நீதம்
என்றுநான்மறைகளுமியம்புவதாலுன் பாதம் (தஞ்ச)

பொல்லாதவிஷயங்களெல்லாமுயன்று பேயே
போலலைந்தேன் சேயே
கல்லாதவெனக்குநீ கல்விதந்தருள் வாயே
அல்லார்குழல்வள்ளிதெய் வானைகொண்காநீயே (தஞ்ச)

நாரமணிசிவகு மாரா கடப்பந் தாரா
நடனஜெயம யூரா

சூரதளநிக்ரக சுரர்தமக்குப   கரா
தாருவேதிருமலை ஜக்கயனுக்கு   தாரா   (தஞ்ச)

61. இராகம் இந்துஸ்தான் -ஆதிதாளம்.

பல்லவி.

என்றன்குறைதீரமுகம் பாராயோ நான்
ஈடேறும்படியருள்   கூராயோ

அநுபல்லவி.

வென்றிசெய்மயில்மிசை வருவோனே நாளும்
மெய்யடியார்க்கருள்   தருவோனே   (என்றன்)

சரணங்கள்.

சாதுசற்ஜனர்கேண்மை   விடுத்தேனே—கெட்ட
தகல்பாஜிகளுடனே   யடுத்தேனே
ஏதுபிழைசெய்யினும்   பொறுப்பாயே—யெனக்
கிகபரசாதன   மளிப்பாயே   (என்றன்)

இன்னமும்பலவிடர்   சகிப்பேனோ—இனி
எந்தவிதமாகநிர்   வகிப்பேனோ
சின்னஞ்சிறியே னென்றன் மேல்வாதா துயர்
தீர்த்துநற்கதிதரலா   காதா   (என்றன்)

மாதவர்தினந்தொழு மலர்த்தாளா   குற
வள்ளிதெய்வானைமகிழ்மண வாளா
சீதமதிவதனனே   குகனே   அன்பன்
திருமலைஜக்கயன்சொல்தேசிகனே   (என்றன்)

(மாத்தாட பாரதேனு என்ற கன்னடப்பாட்டு மெட்டு.)

62. இராகம் கமாஸ்-ரூபகச்சாப்பு.

பல்லவி.

சாமீ யென்மேல் வன்மமா வாதகந்த
சாமீ யென்மேல் வன்மமா

அநுபல்லவி.

க்ஷேம வன்பர் மனது நிறைந்திலகு முனது
பூமலர்ப் பத கஞ்சமே தஞ்சமே கந்த (சாமி)

அன்றமரர்க்கு வென்றி யருளு நின்க்ருபையன்றி
என்றன்கவலை யாறுமா மாறுமா கந்த (சாமி)

முற்று மென்றன் விசனம் மொழிந்திடினு முன்மனம்
சற்றுமிரங்கவில்லையா சொல்லையா கந்த (சாமி)

திருமலைஜக்கயன் சொல் செந்தமிழ் புனையும் நல்
அருமறை நாதா சரணஞ் சரணம் கந்த (சாமி)

---

63. இராகம் சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

தருணம் தருணஞ் சண்முகநாதா மழைபொழிவதற்கிது
தருணந் தருணஞ் சண்முகநாதா

அநுபல்லவி.

அருணச்சுடர்வடிவேலா அம்பிகைதந்தருள் பாலா (தரு)

சரணங்கள்.

கோடை வெய்யிலிற் புழுவைப்போலே
குவலயந் தத்தளிக்குதே யிந்த
கொடுமை யறிந்து மனதிற் கிருபை
கொஞ்ச மு மிலை யா
நீடியதாது வருஷப்பஞ்சத் தில்
நேர்ந்த துன்பம் தீர்ந்துந் தீராதிருக்குதே
பீடைச்சுரத்தால் மெலிந்து தேறும்போது
பின்னுஞ்சயரோக மேலாடினாற் போல
பிழை யெய்து முனே ஐயா மழைபெய்திடவே செய்யாய் (தரு)

தீமையே மிகப்புரியும் அன்னையும்
சேயின் மனது களித்திடப் பால்
செழிக்கக் கொடுத்து வளர்ப்ப தெவர்க்குந்
தெரிந்ததே யன் றோ

ஆமையுஞ்சில காலந்தன் முட்டை   யை
அகன் றிடினுந்தருணந் தவறு   மல்
நேம மாகத்தன் குஞ்சுகள் மேல்   மனம்
நிகழுமெயது போலே காக்கும் பான்மை
மின்பாலிலையாமா மழை அன்பால் வாவே நீயழை   (தரு)

மன்றல் கமழும் நீபனே   திரு
மலைஜக்கயன் றன்மனதிலே   வைகும்
மவுன தேசிக நாதனே யிந்   நாள்
மழையின் றாழ்ச்சி   யால்
தான்று பயிர்கள்   வாடிக்கசங்கி
சுருளுதேபுவி   செழிக்கவேமழை
இன்று பெய்யும் நாளைப் பெய்யு   மென்
றேங்கிய மானிடர்   யாருங்களிப்புற
இப்போதே மழைபெய்யத் தப்பாதே யருள்செய்ய   (தரு)

(பரப்பிரம்ம சுரூபாசரணம் என்றமெட்டு)

64. இராகம் சுருட்டி—ஆதிதாளம்.

பல்லவி.

எனக்கருள் செய்குவாய் குகனே இக்ஷணமதில் மகிழ்வுடன்
எனக்கருள் செய்குவாய் குகனே.

அநுபல்லவி.

மனத்திலடியவர் நினைத்தபடியெதிர் வந்தேகன
மகிமை செய்குருபாசுகமது பெறவாம்   (எனக்க)

சரணங்கள்.

ஞானவாததவ மோனமுனிவர்   தினம்
நாடு முபய பாதா   சார்
நாயக வடிவபர் தூயகுறவ   னிதை
நாதயிகு விநோதா
தினமெனு மிடிமை தானகலவடிமை செய்தே நனி
சித்தத்தினிதுளை நத்தித் தினம்நினை   (எனக்க)

வாத சமயபல பேதமதனில் நல
மருவு சைவஸ்வரூபா ஜெய
வாமதிட்கடன சாமள பிணிமுக
வாகன கமழ் நீபா
சிதநளினமுக மாதர்குலதிலக தெய்வானைமின்
திகழுறுவாகா புகழும் விசாகா (எனக்க)
பாலநயனதிரி சூலபுரதகன
பரமனுதவுபாலா ஜெய
பாபஹிர்தயகன கோபவசுரருயிர்
பருகு விஜய வேலா
தாலமதனில்மிகு சீலமுதவுமுன தாள் மாமலர்
தலையுற்றிடுதிரு மலைஜக்கயனெனும் (எனக்க)

(ராமாகே தாழசால என்றமெட்டு.)

65. இராகம் தோடி—ஆதிதாளம்.

பல்லவி.

வாவா மயூரநாதா என்முன் வாவா

அநுபல்லவி.

மரகதமா மயில் மிசை யடிமை முன் (வாவா)

சரணங்கள்.

கமல சரண பிரணவ கோலா கலசுபகரஜெய வடிவேலா
கருணைசெய்தென்னை நீ காத்தருள்வாய்ஞான
கந்த நாயக கிருபாகரா என்முன் (வாவா)
திருமருவிய சிவகிரிவாசா செழுமறை பரவிய முருகேசா
திருமலை ஜக்கயன் சிந்தைதனில் மேவு
திவ்ய மோன பரிபூரணா என்முன் (வாவா)

---

66. இராகம் மாஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி.

வேலாயுதனே தீ வினைதவிர்த்து நீ மேன்மை தந்தாள் வடி
வேலாயுதனே.

அநுபல்லவி.

சிலா இந்திராணி தேவர்படு மிடர்
தீர்த்தே யசுரரைச் செற்ற செழுஞ்சுடர் (வேலா)

சரணங்கள்.

மடவார் மயலால் மனம் வாடிமிகவும் வருந்தித் தவித்தூரான் மட
படவருமொட்டிற் பட்டுழலும் பக்ஷி
பான்மைபோலாகாமற் பண்பா யெனை ரக்ஷி (வேலா)

இரவும் பகலும் உனை யிதயமதனி லிருத்தியன்புடன் இரவும்
பரவு நானுன்றன் பாதப்புணை பற்றி
பவக்கடல் கடப் பானெண்ணினேன் வெற்றி (வேலா)

கருணாகரனே வள்ளி காந்தனே ஓராறு கஞ்சவதனனே கரு
தருணம் வானவர் தாழுந்திருவடி
தந்தாள் திருமலை ஜக்கயன் சொல்வடி (வேலா)

(அப்பனே பழனி அப்பனே என்றமெட்டு.)

67. இராகம் காபி-ஆதிதாளம்.

பல்லவி.

வன்மமா இன்னமும் வன்மமா

அநுபல்லவி.

சின்மயரூபா குரவலர் சூடும்
தேவா தேவா தினமென்மேல் நீடும் (வன்மமா)

சரணங்கள்.

சஞ்சல மென்றுற் சகிக்கவொண்ணா தே
தமியேன் முறைகே ளாதோ நின் காதே
அஞ்சலென் றெனக்கோ ருறுதிசொல்லா தே
அடிக்க அடிக்கக்கை யேந்துமென்மீ தே (வன்மமா)

பாணியிலயிலும் பன்னிரு தோளும்
பங்கஜநிகராம் பரிபுரத் தாளும்
காணவே யெதிர்வந் தடியரை யாளும்
கருணாகரமுரு கையனே நாளும் (வன்மமா)

சுருதிசேர் வேதம் காறிய வாயா
சுகுணலயபசு பதியருள் சேயா
திருமலை ஜக்கயனுக்குதவு ச காயா
தேவகுஞ்சரி வள்ளி காந்தனே ஓயா (வன்மமா)

68. (வாவா ராகவா எனைரக்ஷிக்க என்றமெட்டு.)

பல்லவி.

வாதா சொல்லையா இன்னம் வாதா சொல்லையா

அநுபல்லவி.

மாதரி பாலா போத வி சாலா
வாழ்த்து மன்பருக் கநுகூலா கதிர்வேலா என்மீது (வாதா)
நித்ய விநோதா இத்தனை சூதா
நெஞ்சங்கொஞ்சமு மிரங்காதா குகநாதா என்மீது (வாதா)
சத்துருநாமே சம்மதந்தானே
சஞ்சலங்களைச் சகிப்பேனே வன்மமேனே என்மீது (வாதா)
சந்ததந்திருமலை ஜக்கயன் சாற்றும்
சாமியன்பர் கவலை மாற்றும் உனைப்போற்றும் என்மீது (வாதா)

(வேலாகிருபை செய்குவாய் எளியேனுக்கு என்றமெட்டு)

69. இராகம் ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமென்றன்மீது வன்மமா உலகமெனை
இகழச் செய்வது தன்மமா

அநுபல்லவி.

அன்ன முடனே செழுங் கன்னல் மலிபணைசூழ்
ஆவினன் குடிதனில் மேவு சற்குருநாதா (இன்ன)

சரணங்கள்.

வேதா முதலோர்பணி பாதா வழங்குமநு
நீதா தெய்வயானைச மேதா பலசமய
பேதா சொல்லரியவி னோதா அடியேன்மீது
வாதா எனக்குநலம் தாதா சண்முகநாதா (இன்ன)

மையார் குழல் வள்ளிசேர் துய்யா பலவளஞ்சேர்
வையா புரிவாழ் முருகையா பவள நிகா
மெய்யா நீ தெய்வமெனல் பொய்யா அடியேன் மன
மையா தெனக்குதவி செய்யாய் பன்னிருகையா (இன்ன)

கொந்தார் பசியகடப் பந்தார் புனையுமெழில்
விந்தா சலபுயநற் கந்தா துதிமிகும் பர
பந்தா எனைவருத்தும் சிந்தா குலமகற்றி
வந்தா தரித்ததிசு கந்தா சங்கரன் மைந்தா (இன்ன)

(பக்ஷமிருக்கவேணும் போய்வாரேன் என்றமெட்டு)

70. இராகம் நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

முருகேசா நின்திருவடி தாதாதா முருகேசா

அநுபல்லவி.

மருமலர்ப்பாதா வள்ளிசமேதா
மயங்குமென்றனைக்காக்க லாகாதா (முருகேசா)

தீவினையாலே தியங்கி மண் மேலே
சிந்தைகலங்குவேனோ ஒருக் காலே (முருகேசா)

செங்கதிர் வேலா சங்கரனை பாலா
திருமலைஜக்கயனுக் கநு கூலா (முருகேசா)

(சைனஜி பலாஜிகா வொட்டியா என்றமெட்டு)

71. இராகம் இந்துஸ்தான் தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம் நீயென் மீதில் வன்மமேதையா

அநுபல்லவி.

உன்னதசீலா உமையருள் பாலா
உம்பர்பிரான்றனக் கருள் திரிசூலா (இன்னம்)

தாமதமேனோ நீயையிதுதானோ
சஞ்சலங்களை யின்னுஞ் சகித்திடுவேனோ (இன்னம்)
குரவலர்த்தாமா குஞ்சரிகாமா
கொடுங்கலியனுக் கெனைக் கொடுத்திடலாமா (இன்னம்)
செழுமறை யுருவே சிறந்தவைக தருவே
திருமலை ஜக்கயன்தோத் திரம் செய்சற்குருவே (இன்னம்)

72. இராகம் உசேனி-சாப்புதாளம்.

பல்லவி.

என்ன வன்மமோ சொல்லையா என்மீதினில்
என்ன வன்மமோ சொல்லையா

அநுபல்லவி.

அன்னஞ் சேர் வயல்சூழும் ஆவினன் குடிவாழும்
அருளே அருளே அருளே மறைப்பொருளே (என்ன)

சரணங்கள்.

சஞ்சலத்தால் வெம்பினேன் சந்ததம் நீயே
தஞ்சமென் றுனை நம்பினேன்
அஞ்சலென றென்மிடிமை யகற்றுவா யுன்னடிமை
ஆனேன் ஆனேன் ஆனேன் எம்பெருமானே (என்ன)

பாவமன்பரைவைதேனோ யாருஞ்செய்யாத
பாதகங்களைச் செய்தேனோ
இரவும்பகலுந்துதி யியற்றுமென் றன்கதி
இதுவோ இதுவோ இதுவோ இதுபொதுவோ (என்ன)

பலவகைத்துயராலே வேடர்வலையிற்
பட்டமானதுபோலே
வல்வினையால்வாடி மயங்குமென்னெதிரோடி
வருவாய் வருவாய் வருவாய் அருள்தருவாய் (என்ன)

கருணாகரவடிவே அன்பர்கள்நாளுங்
கருதும்நான்மறைமுடிவே
திருமலைஜக்கயன்மேல் சித்தம்வைத்தாளும்வைவேல்
தேவா தேவா தேவா என்றன்முன்னீவா (என்ன)

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

73. ஸ்ரீராகம்-அடதாளம்.

பல்லவி.

கழுகாசலத்தில் வாழும் காங்கேயா அடியேனைக்
காத்தருள்வதெக்காலம்

அநுபல்லவி.

பழிகாரனுகொடும் பாவியோநான்முன்
மழுமானை யேந்திய மாதேவ தனயனே (கழுகா)

சரணங்கள்.

மாயையெனுங்கொடிய வாரியிலழுந்தாமல்
தூயபங்கயப்பாத தோணிதனையளித்து (கழுகா)

அண்டவரும் நானென்ற ஆணவந்தனைநீக்கும்
தொண்டர்களையெனக்குத் துணையாகவேகூட்டி (கழுகா)

சைவசமயநெறி சார்ந்தார்கள்வழிபடும்
தெய்வம்நீயல்லவோ தீனதயாளனே (கழுகா)

அருமறைபணிசச்சி தானந்தரூபனே
திருமலைஜக்கயன்றன் சிந்தைதனில்மேவும் (கழுகா)

(மரியாத காதுரா என்ற மெட்டு.)

74. இராகம் சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஆடியேனையாதரி அடியேனை

அநுபல்லவி.

வடிவேலனே மாமயில்வாகனு
வரதாரீ தயவாயா தரி (அடியேனை)

சரணங்கள்.

புராசிவாசல பரிபுரபாதனே
பரமதயாளா பாவவிநாசா

கோரதாரக சூரசம்மாரா
குகனே மால்மருகா ஆதரி (அடியேனை)

சிந்தாகுலமெனும்திரைகள்மேன்மேல்வரும்
தீவினைக்கடல்தாண்ட ஓடிப் புணையே
தந்தாள்வாய்பர சயில நிவாஸா
கதியீதே முருகா ஆதரி (அடியேனை)

சந்ததம்திருமலை ஜக்கய னிதய
தாமரைத்தவிசிற் ரூபா மாகிய
கந்தநாயகா கடம்பணி தோளா
கதிநீயே விமலா ஆதரி (அடியேனை)

---

75. இராகம் காம்போதி—அடதாளம்.

பல்லவி.

கிளிப்பிள்ளைக்குச் சொன்றாற்போல் வேணபுத்தி சொன்னாலுங்
கேளாதலைகின்றையே

அநுபல்லவி.

தெளிவுற நமையாளும் தெய்வம் பரமனருள்
சேயே சேயே சேயே யென்மனப்பேயே (கிளி)

சரணங்கள்.

வீணிலே வாளைப் போக்காதேயருள் தரு
வேலனைப்பணியென ஜெபித்தேன் சகஸ்ர வுரு
நீணிலந் தனிலுள்ள மூடர்க்கெல்லாங் குரு
நீயே நீயே நீயே யென்மனப் பேயே (கிளி)

விதியை மதியால் வெல்லலாமே மாயை யிருட்டு
விலகுவதறிவெனும் விளக்கொளியின் பொருட்டு
நதியிற் றாண்டிற் காரன்கண் மிதப்பிலன்றோ திருட்டு
நாயே நாயே நாயே யென்மனப் பேயே (கிளி)

சீசீயென் றுனையாரு மேசுவார்களே வேழம்
தின்னக்கூவிகொடுப் பாரோகடல் சூழுங்
காசினி மீதினி லெதற்கு முதவாத் தாழுங்
காயே காயே காயே யென்மனப் பேயே (கிளி)

சந்ததந்திருமலை ஜக்கயன்றன் னுள்ளம்
தங்கும் சாமிநாதனைப் பணியவசனும் கள்ளம்
சுந்தரமுருகேசன் கருணைந்த வெள்ளம்
தோயே தோயே தோயே யென்மனப் பேயே (கிளி)

---

76. (உன்னை நம்பினேனையா என்ற மெட்டிலும்
எலனே வானிதோ என்ற ஜாவளிமெட்டிலும் பாடலாம்.)

பல்லவி.

ஐயனே துய்யனே ஆறிரண்டு கையனே முரு கைய

அநுபல்லவி.

மெய்யடியார் தமையாளும்
வேத போத நீதனே முரு (கைய)

ஏந்திழையார் மையல்வழி
இயங்கி முயங்கி மயங்கினேன் முரு (கைய)

இன்ன மென்றன் மீதுவன்மம்
ஏது வாது போதுமே முரு (கைய)

கொடியவரோ டெந்நாளும்
கூடி நாடி வாடினேன் முரு (கைய)

திருமலைஜக் கயன்றனையாள்
தேவ தேவ தேவனே முரு (கைய)

மங்களம்.

77. இராகம் சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெய சுபமங்களமே நிரந்தரமும்
ஜெய சுபமங்களமே

அநுபல்லவி.

கயிலையில் வாசனுக்கு கனகசபேசனுக்கு (ஜெய)

சரணங்கள்.

பலசமயவந்தித பற்பல பேதனுக்கு
மலரகித சின்மய மலைமகள் நாதனுக்கு (ஜெய)

மூதுணர்மிருகண்ட முனிவர் புதல்வனுக்கு
ஓது நித்தியவாழ்வை யுதவு முதல்வனுக்கு (ஜெய)

நிகில வியாபக நீல கந்தரனுக்கு
சுகிர்தமன்பருக்கருள் சோம சுந்தரனுக்கு (ஜெய)

பாவவினையகற்றும் பழநிவாழ் புண்யனுக்கு
தேவர்சேனாபதியாம் சிவசுப்ர மண்யனுக்கு (ஜெய)

திருமலைசக்கயன்சொல் சிவநாம கீதங்கட்கும்
மருவுபல் பொருளுடன் மல்குசத் போதங்கட்கும். (ஜெய)